ஓம் பரப்பிரம்மணே நம:

ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."—திருக்குறள்.

கமலம் - 1. Vol. 1 | சென்னை : அக்ஷய ஸ்ரீ புரட்டாசி மீ 1உ 1926-ம் ஸ்ரீ செப்டம்பர் மீ 17உ | இதழ் - 6. No. 6

ஆநந்த தரிசனம்

"பராசக்தியிடம் பரம பக்தனு யிரு" என்று மகான்கள் கட்டளை யிட்டிருக்கிறார்கள். சக்தி யில்லாமல் எந்தக் காரியமும் நிறைவேறாது. திருடனை யடித்தோட்டும் சக்தி யில்லாதவன் பொருளை யிழக்கிறான். ஆகவே, லக்ஷ்மியின் கடாக்ஷம் சக்தியைப் பூஜியாதவனுக்குக் கிட்டாது. உயர்ந்த பரீக்ஷைக்குப் படிக்க சக்தி யில்லை யென்னும்போது, சக்தி யென்பது பணத்தைக் குறிக்கிறது. முன்னால் திருடனை யடிப்பதற்கு சக்தி வேண்டு மென்றபோது சக்தி யென்பது சரீர பலத்தைக் குறிக்கின்றது. இவ்வாறே ஒருவன் கேட்கும் கேள்விக்கு உத்தரம் சொல்லத் தெரியாமல் நமக்கு சக்தி யில்லை யென்கிறோம். இங்கே சக்தி வித்தையைக் குறிக்கிறது. ஆதலின் எவ்விதமான காரியமும் பராசக்தியின் கிருபையால் நிறைவேற வேண்டி யிருப்பதால் அவ் வம்பிகையின் பாத பத்மங்களை ஸதா தியானம் செய்யக் கடவோம்.

***

"மண்ணாசை பெரிது" நாம் கட்டுகிற வீட்டில் யாரும் அசுத்தம் செய்யாதபடி கவனிக்கிறோம். ஒருவரையும் வாடகை யின்றி

வஸிக்க விடோம். ஒரு அடி மண்ணை எவராவது வெட்டிக்கொண்டு சென்றால் அவர்களை எதிர்க்கிறோம். நமது தேகம் வளர்ப்பதற்காகப் பாடுபட்டு வீடு கட்டும் நாம், நமது தேகம் நமக்குச் சொந்தமில்லை யென்பதை மறக்கிறோம். இதைவிட அவிவேகம் வேறென்ன உண்டு?

***

"தர்மம் தலை காக்கும்" என்ற பழமொழியின் அர்த்தமென்ன? தர்மம் என்றால் பிறர்க்குப் பொருளைக் கொடுத்துத் தான் தரித்திர னுவதென் றர்த்தமல்ல. அவன் மூடனுவான். தான் செய்ய வேண்டிய காரியத்தைக் குறைவறச் செய்வதே தர்மமாகும். மகா தரித்திரனுனலும் காலைக் கடனைச் செய்ய முடியாதா? பகவானுடைய குண வர்ணனையைச் செய்யப் படாதா? ஈசுவர பூஜை புரியலாகாதா? இப்படி எப்போதும் நல்ல கர்மங்களையே செய்து கொண்டிருந்தால் அவனுடைய சித்தம் பாப மார்க்கத்தில் பிரவேசியாமல் அவனைக் காப்பாற்றும் என்று பொருள். யாதொரு காரியத்தையும் கவனியாமல் காலணு கொடுத்து விட்டுத் தானம் செய்ததாக யெண்ணிச் சும்மா விருப்பது தர்மமல்ல. வேதாத்யயனம் செய்வதும், தனக்குத் தெரிந்த கல்வியைப் பிறர்க்குக் கற்பிப்பதும், இயன்ற மட்டில் சிறுவர்கட்கு நல்லுரை கூறுவதும் தர்மமாகும். நம்முடைய உதவியை யலக்ஷியம் செய்வோரிடமும், உபதேசத்தைக் கவனியாதவரிடமும் நாம் வீணில் சென்று உரையாடுவது பிசகு. பூமாலையின் அருமையைப் பற்றி வானரத்தினிடம் எத்தனை நாழிகை எடுத்துரைத்தாலும், அது அம் மாலையைக் காப்பாற்றி வைக்குமா? பிய்த்தெறியும். இதைப்போல் துஷ்டர்கட்கு நல்லுரைகள் கூறினுலும் பிரயோஜனப்படா.

***

"யார் யார்க்கும் ஒவ்வோன் றெளிது." அநேகவித நன்மைகளைப் பகவான் உலகத்திற் படைத்திருக்கிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித நன்மையை ஈச்வரன் அளித்திருக்கிறார் என்பதிற் சிறிதும் ஐயமில்லை. நமக்கு இருக்கும் ஸௌகரியத்தை நாம் அறியாமல் வீணுய்த் துன்ப மடைகிறோம். தனவானுக்கு தன முண்டு. தேகாரோக்கியம் கிடையாது. ஏழைக்கு சரீராரோக்கிய முண்டு, தனமிராது. அழகா யிருப்பவனுக்கு வித்தை யிராது. குரூபிக்கு வித்தை யிருக்கும். பார்ப்பதற்குக் கருப்பா யிருப்பான்; அவனுடைய கியாதி எங்கும் பரவி யிருக்கும். ஒவ்வொருவருக்கும் அவரவருடைய கர்மத்துக்கு ஏற்றபடி ஈசுவரன் சுகத்தைக் கொடுக்கிறார். முற்காலத்தில் ஒருவனுக்கு இரண்டு குழந்தைக ளிருந்தனர். அவர்களில் மகன் ஸௌந்தரியவான். மகள் லக்ஷணமில்லாதவள். இருவரும் ஒருநாள் தங்கள் வீட்டுச் சுவரில் மாட்டியிருந்த பெரிய கண்ணுடியில் தங்கள் பிரதிபிம்பத்தைப் பார்த்தார்கள்.

மகன் தன்னுடைய முகம் அழகா யிருப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்டான். மகள் தன் முகம் கோரமா யிருப்பதைக் கண்டு துயர மடைந்தாள். பின்னர் இருவருக்கும் நடந்த ஸம்பாஷணை யில் ஸகோதரன் தன் அழகை வர்ணித்ததால் ஸகோதரிக்குக் கோபம் உண்டாயிற்று. ஓடினாள் தந்தையிடம். அங்கே தன் ஸகோதரன் செய்த பரிகாசத்தைத் தெரிவித்தாள். பிதா இருவரை யும் அழைத்து, பிள்ளையை நோக்கி, “அடே பிரதி தினமும் கண் ணாடியில் உன் முகத்தைப் பார்த்துக்கொண் டிரு; துர் நடத்தை யால் உன் அழகைக் கெடுத்துக் கொள்ளாமல் ஜாக்கிரதையா யிரு” என்று முத்தமிட் டனுப்பினான். பின்னர் பெண்ணை யழைத்து “பெண்ணே! உன்னுடைய மனத்துக்குமான நன்னடக்கையால் உன் முகத்தை அழகாக்கிக் கொள்; நீயும் பிரதி தினமும் கண்ணாடி யைப் பார்” என்றான்.

***

“அமிர்தம் உண்கிற வாயால் விஷமுண்ண மாட்டார்.” எப் போதும் நல்ல ஸகவாசத்தைத் தேடுவோர் துஷ்டர்களை நேசிப்பார் களா? சாறு பெரிதே யன்றிச் சக்கை பெரிதல்ல. அதுபோல் சொற் சுவை, பொருட் சுவையுள்ள பத்திரிகைகளையும், புத்தகங் களையும் படித்தவர்கள் மற்ற நூல்களை விரும்பார். வெளுத்த தெல்லாம் பாலாமா என்னும் வாக்கியப்படி எல்லா புத்தகங்களும் ஹஸ்த பூஷண மாகா. இகத்திலும் பரத்திலும் மனிதனுக்கு க்ஷேமத்தை விளைவிக்கக் கூடிய தெய்வ பக்தி, சாஸ்திர விசாரம் முதலியன அடங்கிய புத்தகமே வாசிப்பதற் குரியது. அழகும் குணமு முள்ள குழந்தையை எல்லோரும் கையி லெடுத்து லாலனை செய்ய விரும்புவது போல், சிலாக்யமான புத்தகத்தையே யாவரும் கையிலெடுத்து வாசிக்க விரும்புவர். எதிலும் நல்லது கெட்டது உண்டு.

***

“மூப்பு, பிணி, மரணம்” ஆகிய மூன்றையும் கண்டு, காயம் நிலையல்ல வென்று நித்யமான சுகத்தை யடையக் கருதி, கௌதமர் தமது அழகிய மனைவியையும், சுந்தரனான குமாரனையும், அன்புள்ள தாய் தந்தையரையும் விட்டுப்பிரிந்து துறவியாகி பௌத்தமதத்தை உலகெங்கும் ஸ்தாபித்தார். இவராலேதான் புத்தசமய முண்டா யிற்று. இவரைப்போல் உத்தமர் எவருண்டு? இவ்வுலகில் இன்பம் அனுபவிக்கச் சக்தியற்றுப் போனாலும் ஆசை விடுகிறதில்லை. வயது முதிருந் தோறும் பொறாமை, கோபம், அசூயை முதலிய துர்க் குணங்கள் விருத்தியாய்க் கொண்டே யிருக்கின்றன. இந்தத் துர்க் குணங்களைத் துரத்தி மனதுக்கு அமைதியை உண்டாக்குவதுதான் விவேகிகளின் காரியம்.

***

"மாயை, வித்தை" என்னும் இரண்டு குணங்களில் மாயையால் பகவான் மறைக்கப்பட்டு ஜீவனாக விளங்குகிறார். வித்தையால் அவருடைய நிஜஸ்வரூபம் தெரிகிறது. கையிலுள்ள குடை சூரியனை மறைப்பது போல், மாயை ஆத்ம ஸ்வரூபத்தை மறைத்து ஜீவனாகக் காட்டுகிறது. குடையை யெடுத்து விட்டால் சூரியனுடைய பிரகாசம் தெரிவது போல், மாயை நீங்கினால், அதாவது ஞானமுண்டானால் ஆத்மாவின் ஸ்வயம் பிரகாஸம் நன்றாகத் தெரியும். குடையானது நமது கண்ணை மறைக்கிறதே யன்றி சூரியனை மறைக்கவில்லை. சூரியனது ஒளியும் அதனால் மழுங்கவில்லை. அது போல ஆத்மாவின் ஸ்வயம் பிரகாசமானது மாயையால் கெடவில்லை. மாயை நமக்குப் பிரமையை உண்டாக்குகிறதே யன்றி ஆத்மாவின் பிரகாசத்தைக் கெடுக்கவில்லை. ஆத்மா எப்போதும் ஜோதிமயமாகவே இருக்கிறது. மனதை வெளியேயுள்ள பொருள்களிற் செல்லவிடாமல் ஆத்மாவினிடமே செலுத்தினால், நாளடைவில் அது அங்கு மிங்கும் ஓடாது வசப்பட்டு ஒரே நிலையில் நின்று வேறு பொருளை நினைப்பதென்னும் தொழிலை விட்டுத் தானாகவே அடங்கி விடும். பின்னர் அம்மனம் நாசமாகி, அலைகள் நின்றதும் ஜலத்தில் நமது ரூபம் தெரிவதுபோல் ஆத்ம ஸ்வரூபமே தோன்றும். எங்கும் ஈசுவரமயமாக இருப்பதை அப்போது நாம் உணர்வோம்.

***

"சிரத்தை, பக்தி, தியானம்" ஆகிய மூன்றினாலும் ஞான வித்தையை அடையலாம். சிரத்தையென்பது என்ன? கண்ணுக்குத் தெரியாத பொருள் ஒன்று உண்டென்றும், வேத சாஸ்திரங்கள் சொல்வது உண்மை யென்றும் நம்பிக்கை கொள்வதே சிரத்தையாகும். பக்தியாவது குருவிடமும் தெய்வத்தினிடமும் தன்னுடைய பிரியத்தை யெல்லாம் செலுத்துவதேயாம். தியானமாவது எவ்விதமான வேறு நினைவுமின்றி பரமாத்மா ஒருவரையே இடைவிடாமல் நினைத்துக்கொண் டிருப்பதாம். இம்மூன்றையு முடையோர் ஞானவித்தையை அதாவது வேதாந்த நூல்களை அப்யஸிக்கத் தகுந்தவர். ஸகல சுகங்களையும் வெறுத்து பற்று அற்றவர்களே ஆத்ம ஞானத்தை அடையத்தக்கவர். மற்றவர்கட்கு அந்த ஞானமுண்டாவதரிது.

***

"கொடுத்தவன் நல்லவன், கொடாதவன் கெட்டவன்" என்பது உலகச்சொல். திருப்பதி வெங்கடாஜல ஸ்வாமியைக் கூட மனுஷ்யர்கள் காணிக்கை செலுத்தி வசப்படுத்த எண்ணுகிறார்கள். இந்தப் புரட்டாசி மாதத்தில் திருப்பதி மலையில் லக்ஷக்கணக்கான பிரார்த்தனைக்காரர்களைக் காணலாம். பகவான் நமது பக்தியை விரும்புகிறாரே யன்றி, மற்றதைக் கோரவில்லை. கொடுத்துக் கொடுத்து நேசம் ஸம்பாதிப்பது என்றும் நிலைத்திராது. இது

போல் பணத்தைக் கொடுத்து பகவானுடைய விசுவாஸத்தை யடைவதென்பது நிலையற்றதும் மௌடீகமுமாம். உண்மையான பக்தியை ஈச்வரனிடம் செலுத்தினால் நிலையான சுகம் நம்மை நாடி வரும். அவ்விதம் இருக்க, பிரார்த்தனை வழக்கம் ஏற்பட்டதற்கும் காரணமுண்டு. மூட பக்தியானாலும் பக்தி சிறந்த தென்பர் பெரியோர். அந்த சொற்பமான பக்தியாவது உண்டாகட்டும் என்பது அவர்களின் உன்னத கருத்து. அந்தச் சொற்ப பக்தியிலிருந்தும் படிப்படியாய் உயர்ந்து ஒரு காலத்தில் பரம பக்தனாதலும் கூடு மன்றோ?

***

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்." ஒரு ஸமயம் இரண்டு போர்வீரர்கள் எதிரிகளுக்குப் பயந்து உயிர் தப்பினால் போது மென்று காட்டை நோக்கி ஓட்டம் பிடித்தனர். தங்கள் காலடியைப் பிடித்துக்கொண்டே எதிரிகள் வருவரென்ற பயம் அவ்விருவருக்கும் உண்டாயிற்று. ஆகவே, நடுவழியில் ஒரு மலை மீதேறி ஆங்கிருக்கும் குகையொன்றில் ஒளிந்து கொண்டார்கள். சில நேரத்துக்கெல்லாம் சைன்யங்கள் வரும் சப்தம் கேட்டது. அப்போது இருவரில் ஒருவர் "நண்பா, என்ன செய்வது? குகையிலிருந்து ஓடலாமா" என்றார். அதற்கு மற்றவர் "அஞ்சாதே, நம்மைப் பகவான் காப்பாற்றுவார், அவரைத் தியானித்துக்கொண்டிருந்தாற் போதும்" என்று ஞானோபதேசம் செய்தார். இருவரும் ஆபத்காலத்தில் தெய்வமே துணையென்று நம்பி அவரை உருக்கமாய் ஸ்தோத்திரம் செய்தனர். இங்ஙனமாக, எதிரிகளோ இவ்விருவரின் காற்சுவடுகளைக் கண்டு பிடித்துக்கொண்டே குகையண்டை வந்தனர். அப்போது ஒரு நரி அக்குகையிலிருந்து வெளியே யோடியது. சில பக்ஷிகள் பறந்து வந்தன. அதைக் கண்டு எதிர்களிற் சிலர், "நண்பர்களே, இந்தக் குகையில் மனித ஸஞ்சாரமில்லை" என்றனர். மற்றவர்கள் இவர்களின் வார்த்தையை நம்பி அப்பாற் போய் விட்டனர். ஆகவே, உண்மையாகவே பூர்வம் நிகழ்ந்த இவ்விஷயத்தால் ஈசுவரன் எப்போதும் தம்மை நம்பினவரைக் கைவிடமாட்டா ரென்று தெரிய வருகிறது. ஆதலின் நாம் பகவானை ஸதா பிரார்த்திக்கக்கடவோம்.

ஸ்திரீகளின் மௌட்யத்தாலேயே குழந்தைகளுக்கு நோய்வருகிறது. ஜீரணமாகாத பண்டங்களைக் குழந்தைகளுக்கு வாங்கிக்கொடுப்பர். சுகாதாரம் இன்னதென்பதைத் தெரிவித்து அவற்றை யனுஸரிக்கும்படி போதிக்கவேண்டும். சிலர் மந்தமதிகளா யிருப்பதால் ஒவ்வொருகாரியத்தையும் தாமஸமாக செய்வர். இந்தத் துரப்யாஸம் அவர்களிடம் வளருகிற குழந்தைகளுக்கும் படிகிறது. தாயைப்போலச் சேய். குழந்தைகளுக்கு இளமையிலேயே ஈசுவரனைப் பஜிக்கும்படி கற்பிக்கவேண்டும்.

ஆநந்த குண போதினி

அக்ஷய௵ புரட்டாசிமீ 1உ

கல்வி கற்பிப்பதின் நுட்பத்தைப்பற்றி 'ப்ரோபெல்' பண்டிதரின் கருத்து.

ஸமீப காலத்திலே, ஜெர்மனியில் ஹேர்பார்ட், ப்ரோபெல் என்ற கீர்த்தி மிக்க சிக்ஷா பண்டிதர் இருவர் இருந்தனர். இவருள்ளே ப்ரோபெல் என்பவர் நம் நாட்டு வேதாந்த நுட்பங்களை நன்குணர்ந்தவராய், அந்த வேதாந்தத்திற்கோர் அங்கமாகவே தமது 'சிக்ஷா சாஸ்திர'த்தை வகுத்திருக்கிறார்.

'சிக்ஷா சாஸ்திரம்' என்பது கல்வி கற்பிக்கும் தொழிலை அறிவுறுத்தும் சாஸ்திரம். இப்போது நம் நாட்டில் தேசியக் கல்வி விஷயத்தில் மிகவும் பாடுபட்டு வருவோராகிய லஜபதிராய், மகாத்மா காந்தி, ரவீந்திரநாதடாகூர், அனிபெஸன்ட், மதன்மோஹன மாளவியா—முதலியவர்களும், இப்போது நம் நாட்டிலே செய்யப்பட வேண்டிய கல்வித் திருத்தமெல்லாம், நமது நாட்டின் விசேஷப் பெருஞ் செல்வமாகிய ஆத்ம ஞானத்திற்கு ஓர் அங்கமாகவே இருக்க வேண்டுமென்று சொல்லி, மேற்படி ப்ரோபெல் பண்டிதரின் மார்க்கத்தையே வெளியிடுகிறார்களாதலாலும், நம்மவர்களுக்கு அப்பண்டிதரின் முறைகள் ஒருங்கே புதுமையும், பழமையும் உடையனவாய் இன்பந் தருமாதலாலும், ஸ்ரீ ப்ரோபெல் ஆசிரியரின் மிகவும் ரஸமயமான அபிப்பிராயங்கள் சிலவற்றை நமது தமிழ் நாட்டு அன்பர்களுக்காக இங்கு வெளியிடுகின்றோம். இவற்றை ஒருமுறைக்கு இருமுறை படித்துப் பார்த்தால்தான் அதன் உட்கருத்து தெளிவாய்ப் படும்.

—"அறிவும் ஆலோசனையும் உடையவனும் தன்னை அறிவதிலே அபிவிர்த்தி பெற்றுவரும் ஜந்துவாகிய மனிதனை; தெய்வீக ஒருமையாகிய அவனுடைய உள்ளியல்பு—சுத்தமாகவும் தாராளமாகவும் பிரக்ஞையுடனும் வெளிப்படச் செய்து காட்டும்படி புரிவதும், அங்ஙனம் புரிதற்குரிய நெறிகளையும் உபாயங்களையும் அவனுக்கு உணர்த்துவதுமே கல்வி கற்பிப்பதன் நோக்கங்களாம்"— என்று ப்ரோபெல் பண்டிதர் சொல்லுகிறார்.

மேற்கூறிய கருத்தை அப்பண்டிதர் தாமே பின்வருமாறு விளக்கிக் காட்டுகிறார் :—

—"ஒவ்வொரு வஸ்துவிலும், (அதாவது வஸ்துவிற்குள்ளும்) ஒரு நித்யவிதி இருந்து, அதனை (அதாவது அந்த வஸ்துவை) ஆளு

கிறது. இந்த நித்யவிதி என்னப்பட்டதானது, மிகத் தெளிவாகவும் ஸ்பஷ்டமாகவும், மனிதனுக்குப் புறம்பே (அதாவது வெளியே) யிருப்பதாகிய (1) இயற்கையிலும், அகத்தே (அதாவது உள்ளே) இருப்பதாகிய (2) ஆத்மாவிலும், இவ்விரண்டையும் ஒன்று சேர்த்துப் பிணைப்பதாகிய (3) உயிரிலும்—ஆக இந்த மூன்றிடத்திலும் ஒருங்கே தன்னைப் புலப்படுத்திக் கொள்ளுகிறது. அதாவது தனது ஜோதியை வெளியிட்டுக் கொள்ளுகிறது என்றபடி."

—"இவ்வாறு அனைத்தையும் ஆளுவதாகிய இந்த நித்யவிதி என்னப்பட்டது எங்கிருந்து எதனிடத்திருந்து தோன்றியதென்பது கேள்வி. அதற்கு விடை இதுவே:—இந்த நித்யவிதிக்கு ஆதாரமாய் துணையாய் நித்யமும், சித்தும், ஸர்வ சக்தியுடையதுமானதோர் பரம்பொருள் இன்றியமையாததாக இருக்கிறது. இப் பரம்பொருள் 'கடவுள்' எனப்படும். எல்லாம் கடவுளிடத்திருந்து வந்தன; கடவுளாலேயே ஆளப்படுவன. எல்லா வஸ்துக்களுக்கும் தனி யாதாரமாவது கடவுள். எல்லாவற்றிலும் கடவுள் வஸிக்கிறார்; எல்லாவற்றையும் கடவுள் நடத்துகிறார். எல்லாம் கடவுளிடத்தே நிற்பன; அவருள்ளே வாழ்வன. ஒவ்வொரு வஸ்துவுக்குள்ளேயும் கடவுள் இருந்து தொழில் புரிவது கொண்டே, அந்த வஸ்துக்கள் ரூபமும் தோற்றமும் வளர்ச்சியும் ரஸமும் சுவையும் அமைந்தனவாகி, அவை ஒரு பொருள் என்னும் தன்மை பெற்றனவாய் உலகில் உள்ளவையாகின்றன. ஒவ்வொரு வஸ்துவிலுமிருந்து தொழில் செய்யும் கடவுளே அதன் ரஸமும் சுவையுமாகிறார். இந்தக் கடவுளையே குறிப்பிட்டு—"நித்யவிதி" ஒன்றிருந்து ஆளுகிறது—என்ற பெயரால் மேலே சொல்லப்பட்டிருக்கிறது."

இங்ஙனமாக, நவீன 'ஸயன்ஸ்' கோட்பாடுகளை ஆதாரமாகக் கொண்டனவும், உபநிஷத்து வாக்கியங்களை ஒத்தனவுமாகிய வசனங்களாலே ஜகத்தின் ஆதார வஸ்துவை விவரித்துவிட்டுக் கீர்த்திபெற்ற ப்ரோபெல் பண்டிதர் கடைசியாக,

—"அந்தப் பிரம்மத்தை ஒருவன் தனது உலக வாழ்க்கையில் அறியப் பெறுவதும், தன்னிடத்திலே அந்தப் பிரம்மத்தின் தோற்றத்தைக் கண்டுணர்வதுமே கல்விப் பயன்"

என்று முடிவு படுத்துகிறார்.

—"மேன்மேலும் வளர்ச்சி பெற்று விரிவெய்தி, கடைசியில் தம்முள்ளிருக்கும் சுவையாகிய ரஸத்தைப் புறத்தே அதாவது வெளியிலே காட்டுதல் என்பது எல்லா வஸ்துக்களினிடத்தும் பொதுவாக அமைந்த நியமம். அந்த 'ரஸம்' எனப்படுவதானது அவற்றுள் (அவ்வஸ்துவுக்குள்) இருக்கும் பிரம்மம்—அல்லது கடவுள் ஆகும். இவ்விதம் வஸ்துக்கள் தம்முள் இருக்கும் ரஸத்தைக் கண்

டறிந்து அதை வெளியில் தோற்றுவித்துக் கொள்ளும் தன்மைக்கு வருவதுபோலவே, மனிதனும் தனக்குள் இருக்கும் கடவுளம்சத்தை உலகுக்கு வெளிப்படுத்துவதற்கும், அவ்விதம் வெளியிடுவதற்கு உதவியாக—அதற்கேற்ற பக்குவம் வரும் வண்ணமாக—அந்தக் கடவுளம்சத்தை அவனுடைய அறிவுக்கு எட்டும்படி செய்வதற்கும், கல்வி ஓர் உபாயமாக—உதவியாக இருக்கிறது" என்கிறார்.

கல்வியால் விளையும் லௌகிகப்பயன் யாதென்னுமிடத்தே இவர் "அறிவுடைமை" என்கிறார். இதுவே மனிதனுடைய பரம லக்ஷ்யமென்றும், மனுஷ்ய நிர்வாகத்தின் மஹோன்னதமான கார்யமென்றும் சொல்லுகிறார். "இயற்கையை அதிகமாக மாணுக்கர் கவனிக்கும்படி செய்தால், கல்வியிலே உண்மையான அநுபவம்—நேரிற் கண்ட அநுபவம்—அதிகமாகச் சேர்ந்து அறிவு தெளிய இடமுண்டாகும்" என்பது இப்பண்டிதரின் கொள்கை. "கல்வியினுலே தன் மனத்திலும் வாக்கிலும் தெளிவு பிறப்பதும், இயற்கையிடத்தே இன்பமும் சமாதானமும் ஏற்படுவதும், கடவுளிடம்—அவருடன் ஒன்று கலந்துவிடும் நினைவாகிய ஒற்றுமை பிறப்பதும் மனிதன் எய்தும் பயன்கள்"—என்று ப்ரோபெல் சொல்லுகிறார்.

உபாத்யாயன் மாணுக்கரை எதிலும் வற்புறுத்தக் கூடாது. மாணுக்கனுடைய புத்திக்குள் நுழையாத ஒரு விஷயத்தை, அது நுழையாமலிருக்கும் ஸமயத்தில், சம்மட்டிகொண்டடிப்பது சரியான முறையன்று. உபாத்யாயர் பிரம்பைக் கீழே வைத்துவிடுதல்போல் அதிகாரத்தையும், பாத்தியதையையும், கட்டாயப் படுத்திப்போதிக்கும் குணத்தையும் கீழே போட்டுவிட வேண்டுமென்று ப்ரோபெல் கருதுகிறார். அதாவது ஏறக்குறைய உபாத்யாயர் தனது ஆண்டவித் தன்மையை எறிந்துவிட்டு, ராஜ மாட்சிமை தங்கிய குழந்தைகளுக்குக "கல்விச் சேவகனுக" இருக்கவேண்டுமென்பது அந்த ஆசிரியரின் அபிப்பிராயம்.

ஒரு உபாத்தியாயரின் செய்கையானது பக்ஷபாதமாகவும் ஒருதலைச் சார்பாகவும் இருக்கக்கூடாது. ஹே உபாத்யாய! நீ ஒரு வேலை செய்கையிலே அதை உன் ஆத்மா முழுதும், உன்னுடைய இயற்கைத் திறன் முழுதும் கூடிச் செய்யவேண்டும். அச்செய்கையிலே நீ முற்றிலும் லயப்பட்டு ஊன்றி நிற்கவேண்டும். இத்தகைய தொழில் புரிந்து, மாணுக்கர் தாம் எடுத்த கார்யங்களிலெல்லாம் இயற்கையாகவும் எளிதாகவும் வெற்றி பெறும் வண்ணம் செய்விப்பது உன் பாடசாலையின் நோக்கமாகக் கடவது—என்கிறார்.

கல்வியினுல் ஏற்படும் பயன்—கேட்ட கேள்விகளுக்கு உடனே குருட்டுப் பாடத்தை மடமடவென்று ஒப்புவித்துவிடுகிற 'தகவல் கூட்டம்' அல்லவென்றும், செய்கைத் திறமையும் உயர்ந்த மன நிலையும் அமையப் பெறுவதே கல்வி யாகுமென்றும், அது ஸகலருக்

கும் சொல்லாமலே விளங்கக்கூடிய ஸாதாரண ஸத்யமாதலின்—அதைப்பற்றித் தாம் குறிப்பிடத் தேவையில்லையென்றும் ப்ரோபெல் கருதுகிறார்.

படிப்பு முடிந்து பரீக்ஷைகள் நடத்துகையிலே, நமது ஸர்க்கார்க் கல்வி யதிகாரிகள், வெறுமனே மனனபரீக்ஷை செய்கிறார்களே யல்லாமல், குணப்பரீக்ஷை செய்வதில்லை. குணம் என்னும் குன்று ஏறாத இந்தப் படிப்பு காசு பெறுமா? இப்படிப்பட்ட நிலைமையிலிருப்போரிடம், சாஸ்த்ரங்களை நெடுகப் படித்துச் செல்வதுமட்டும் கல்வியின் நோக்கம் இல்லையென்றும், தன்னையும்—உலகத்தையும்—கடவுளையும்—இம்மூன்றுக்குமுள்ள ஸம்பந்தங்களையும் அறிந்து அதன்படி நடக்கும் வண்ணம் கற்பிப்பதே கல்வியின் நோக்கம்—என்றும் சொல்லும் ப்ரோபெல் பண்டிதரின் வசனம் என்ன பயன் தரும்?

இன்னும், ப்ரோபெல், ஹெர்பார்ட் என்ற ஆசிரியர்களின் நூல்களை ஆராய்ச்சி செய்யச் செய்யத் தற்காலம் நம் நாட்டில் நடைபெறும் கலாசாலைகளும் பாடசாலைகளும் மாணாக்கரை அடிமைகளாக்கப் போதனை செய்கின்றனவேயன்றி, விடுதலை செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் இயல்வன அல்ல என்பது மிக நன்கு விளங்கும். எனவே, மேற்கண்ட கருத்துகளைக் கல்வி முறைகளிலே பயன்படுத்துவதற்குத் தேசியப் பாடசாலைகள் தனியே தோன்றி உத்ஸாஹத்துடன் உழைக்கக்கூடிய காலத்தை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

உலக நிலை இதுவே.

நாலு காசு வரவு இருக்கும்போதே, பிறகு தான் படுத்துக்கொள்ளும் காலத்திற்கு உதவியாக இருப்பதற்கு, ஏதாவது சேர்த்து வைத்துக் கொள்ளாதவன்—பிறகு எந்தக் காலத்தில் தான் சேர்க்கப் போகிறான்? இந்த நாளில், செலவிட்டவனுக்குப் பெருமையில்லை; கையில் நாலு காசு வைத்திருப்பவனுக்கே பெருமை. அவன் பக்கமே யாவரும் நிற்பர். செலவிட்டவனைப் பழிக்கவே மனிதர்கள் தோன்றுவர். எனவே, இனியேனும் விழிப்படைக.

தர்க்க விளக்கம்

விடை

(82-ம் பக்கத் தொடர்ச்சி.)

சென்ற வைகாசிமாதப் பத்திரிகையில் கண்ட சந்தேக வினுக்களுக்கு இங்கு விடை தருகிறேம். இராமாயணத்தை நன்கு வாசித்துத் தங்களுக்குண்டான சந்தேகங்களை மனதில் வைத்துக்கொள்ளாமல் பத்திரிகையில் பிரசுரித்து, எல்லோருடைய சந்தேகமும் அதனுல் தீருமாறு செய்வது மேன்மையான காரியம்.

சென்ற பத்திரிகையில் எழுதியதை இரண்டுவிதமாகப் பிரித்துக் கொள்ளலாம். முதலாவது சீதாதேவி உத்தமியல்ல (?) என்பதற்கு அத்தாக்ஷி நான்கு:

1. காட்டில் புருஷன் கஷ்டப்படும்பொழுது கூட இப்பெண்ணுக்கு மான் என்னவேண்டி யிருக்கிறது ?

2. தன் கணவரின் பராக்கிரமம் தெரிந்திருந்தும், இப்பெண் இலக்குமணரை அவதூருய்ப் பேசித் தன்னிடமிருந்து விரட்டியது.

3. கணவன் இறந்துவிட்டாரோ வென்று மனம் தவிக்கும் காலத்தில் சந்நியாசியை உபசரிக்கும்படி எப்படி அந்த அம்மைக்கு மனம் வந்தது ?

4. ஒரு பாப புருஷனுகிய இராக்கதன் தன் தலையிலொரு கையையும், தொடையிலொரு கையையும் போட்டுத் தூக்கிக்கொண்டு போகும் பொழுது, அவ்வம்மை பிராணனை விடாமல் அசோக வனத்திற்குப் போய் பத்து மாதம் இருந்தாரே. உத்தமியா யிருந்தால் பிராணனை விட வேண்டாமா ?

என்ற நான்கு கேள்விகள் உண்டு. இதற்கு முதலில் சமாதானம் சொல்லுகிறேம். பிறகு இராமபிரானைப்பற்றி அடுத்த பத்திரிகையில் எழுதுவோம். ஏன் முதலில் இதற்குச் சமாதானம் சொல்ல வேண்டுமென்பது ஸ்ரீராமரைப்பற்றி நாம் எழுதும்பொழுது தெரியவரும்.

எல்லோரும் காட்டிலே பரிதபித்துக்கொண் டிருக்கையில் சீதைக்கு மானும் வேண்டியிருக்கிறதா ? இதென்ன நீலித்தனம் என்பது கேள்வி. இது ஒருநாளும் நீலித்தனமாகாது. ஏனெனில், சீதைக்குக் காட்டில் இருப்பதாகக் கிஞ்சிற்றேனும் எண்ணமுண்டோ ? அப்படி யிருக்கும் விஷயத்தில், "இராமர் இருக்கிற இடம் அயோத்தி" என்ற வசனம் யாருக்கு ஏற்பட்டது ? சீதையின் வாசகமன்ரே அது. அந்த ஸ்திரீ ரத்நத்துக்கு நகைகள் வேண்டுமா ? தாதிகள் கூட விருக்க வேண்டுமா ? அவ்வம்மையின் பர்த்தா ஒருவர் இருந்தால் போதாதா ? வேறு ஸ்வர்க்கம் அப்பெண்கள் நாயகத்துக்கு ஏன் ? அப்படி யிருக்கும்பொழுது அவ்வம்மைக்கு ஸ்வர்க்கம் பூமியிலிருப்பதாக எண்ணமே யொழிய ஏதோ காட்டில் கஷ்டப்படுவதாக நினைக்கப்போகிறதேது ? கஷ்டமென்கிற வார்த்தை இராமர் இருக்குமிடத்திலும்

இருக்குமோ? அப்படி யிருக்கும்பொழுது ஸ்திரீகள் தங்கள் புருஷனை எப்பொழுதும் அழகான வஸ்துக்களை இச்சித்துக் கேட்பது ஸ்வபாவமாகையால், சீதை மான் வேண்டுமென்று கேட்டது குற்றமல்ல. அது ஸ்திரீகளின் ஸ்வபாவமே.

இரண்டாவது கேள்வி யாதெனில், தன் புருஷனது பராக்கிரமம் தெரிந்திருந்தும் லக்ஷ்மணனை அவதூறாகப் பேசி விரட்டியது உத்தமி என்பவளுக்குத் தகுமோ என்பது. உத்தமியா யிருந்தால் அப்படியே செய்ய வேண்டும். சீதையின் இந்த நடத்தை—ஸ்திரீகளுக்கே சலனம், அதாவது மனதில் உறுதியில்லாத தன்மை ஸ்வபாவ குணமென்று உலகத்தார்க்குத் தெற்றென விளக்கும் பொருட்டென்றே தெரிய வருகிறது. புருஷன் தைரியம் சொல்லி யிருந்தபோதிலும், "ஓ! இலக்ஷ்மணா" என்ற சப்தத்தைக் கேட்டவுடன் அவ்வம்மணியின் மனம் கலங்கிப்போய்விட்டது. ஒருக்கால் ஏதோ நமது துரதிருஷ்டத்தால் நமது நாதன் இறந்துவிட்டாரோ, இல்லையேல் லக்ஷ்மணனைக் கூப்பிடுவானேன் என்ற சந்தேகம் மனதில் தட்டினவுடன் லக்ஷ்மணரைப் புறப்பட்டுப் போகச்சொன்னார். லக்ஷ்மணர் அதற்கு ஏதோ சமாதானம் சொன்னார். தன் நாதன் தான் போய் விட்டாரோ? இனி எப்பொழுது நமது நாயகனைக் காண்போம் என்ற துக்கம் மேலிட்டவளுக்கோ லக்ஷ்மணரின் வார்த்தைகளில் நம்பிக்கை விழும்? ஆகையால் நாயகனுக்கு உதவி அனுப்பும் காலத்தில் வேறு யாரைக் கோபித்தால்தா னென்ன? கடுமையான வார்த்தை சொல்லியாவது லக்ஷ்மணனை யனுப்பி நமது புருஷனை மீட்கச் செய்வோமென்ற எண்ணத்தினாலேயே லக்ஷ்மணனை விரட்டினாள்.

புருஷன் உயிருடன் இருக்கிறாரோ என்று உள்ளபடிக்கு வியஸனித்துக் கொண்டிருந்தால் அதிதிக்கு உபசாரம் செய்யத் தோன்றுமா? ஆகையால் அவ்வம்மைக்குப் பதிவிரதை என்ற பெயர் என்னமாய்த் தகும்?—என்ற கேள்விக்கு முன்னதாகச் சமாதானம் சொல்வோம். சீதையோ நடுக் காட்டில் ஒருவருமில்லாத விடத்தில், நமது பர்த்தாவை எப்பொழுது காணுவோம், அவர் உயிருடன் இருக்கிறாரோ, நமக்குப் பகவான் என்ன கதி விடுவாரோ, என் செய்வோம்—என்று தவித்துக்கொண் டிருக்கும் காலத்தில் ஒரு சந்யாசியைப் பார்த்தார். புத்திசாலிப் பெண் என்ன செய்வாள்? நல்ல வேளை ஒரு சமயம் வாய்த்தது, இந்த மகான் "தீர்க்க சுமங்கலீபவ" என்று ஆசீர்வதிக்கட்டுமே. மார்க்கண்டேயர் பிராமண கோஷ்டிகள் இருக்கு மிடத்திலெல்லாம் சென்று நமஸ்கரித்து, "தீர்க்காயுஷ் மான்பவ" என்ற பிராமண ஆசீர்வாதத்தாலேயே நமனை வென்றாரே? ஆகா! பெரியோர்களின் மகிமைக்கு அளவுண்டோ? இம்மகான் நம்மை ஆசீர்வதித்தால் அவ்வாசீர்வாத பலத்தாலேயே நமது புருஷன் உயிருடன் திரும்பி வருவதும் கூடுமன்றோ? ஆகையால் நாம் அவருக்கு அர்க்கியம் முதலானவைகள் கொடுத்து அவரை உபசரிப்போம் என்ற எண்ணம் அதி புத்திசாலியான ஸ்திரீக்குத் தோன்றுமே யொழிய, கேவலம் ஸாமான்யமான மாதர்களுக்கு அவ்வித சிந்தை யுண்டாவதரிது.

நான்காவது கொண்டையில் ஒரு கையும், தொடையில் ஒரு கையும் ஒரு ராக்ஷதன் வைத்துக்கொண்டு தூக்கிச் செல்லும்போது அவ்வம்மை உயிர் விடாததால் அவளைப் பதிவிரதை யென்று சொல்லலாமா என்பது.

முன் ஜென்மத்தில் வேதவதியா யிருந்தபொழுது ராவணன் சீதையைத் தொட்டதற்காக உயிரை விட்டாள். ஏன்? அவள் கன்னிகை, நாதனொருவருமில்லை. பிதாவை நாதனென்று சொன்னாலும், ராவணனைச் வரனை வெல்லும் சக்தி ஒருவருக்குமில்லை. நம் கற்பு போய்விடுமென்று தெரிந்து ஜீவனைத் துறந்தாள். இப்பொழுதோ சீதாதேவிக்கு நாதன் ஒருவன் இருக்கிறார். அவரிடத்தில் தெரிவித்தபிறகல்லவோ அவ்வம்மை உயிரைத் துறக்கவேண்டும். அவள் உயிரைத் துறப்பதாகவே எண்ணு வோம்; அவள் உயிரைத் துறந்தவுடன், ராவணனும் சவத்தை எறிந்து விடுவான். ஸ்ரீராமமூர்த்தியும் தமது உத்தம பத்தினியின் உயிர் போன பிறகு இவ்வுலக இச்சையையே யொழித்துத் தாம் தபசுக்குச் சென்று காலம் கழிப்பார். ராவணனது அக்கிரமத்திற்கு ஒருநாளும் அழிவு வாரா தென்பது நிச்சயம். இது நிற்க, ஒரு சுமங்கலியை ஒரு பலசாலியாகிய பரபுருஷன் துரெண்ணத்துடன் பலாத்காரப் படுத்துவதற்காகத் தூக்கிக் கொண்டு போவதாய் வைத்துக்கொள்வோம். அவளுக்கு அந்தச் சமயத்தில் பிரக்ஞாபங்கம் வருமா, அல்லது, கோபம் உண்டாகுமா? பிரக்ஞாபங்கமே வராதென்பது நமது எண்ணம். 'இந்தச் சண்டாளனை நாம் எப்படிக் கொலை செய்யலாம்? நமது புருஷனிடத்தில் சொல்லி இவனைச் சின்னா பின்னம் செய்து இவ்வுலகத்தை விட்டொழிக்க வேண்டும்'என்று 'கோ' வென்று தெருவெல்லா மழுவாள். தனக்குத் தெரிந்தபேரிடத்திலும், தன் பிராண பதியினுடைய மித்திரர்களிடத்திலும் கதறுவள். என்ன உபாயம் செய்தால் தன் பர்த்தா சீக்கிரம் வரக்கூடுமென்று யோசித்துத் தன்னாலாகிய உபாய மெல்லாம் செய்வள். கணவன் கையாலாகாத கேவலம் தீன புருஷனா யிருந்தாலும், இந்தத் தடியனைக் கொன்று போடுவானென்ற எண்ணம் ஒவ்வொரு ஸ்திரீக்கு மிருக்குமளவில், விவேகசாலினியான சீதைக்கோ இது தெரியாமற்போகும்? ஜடாயுவினிடத்தில் கதறினாள். தன் பிராணேச வரனுக்குச் சமாசாரம் தெரியவரட்டுமென்று சுக்கிரீவனிடத்தில் தன் ஆபரணாதிகளைக் கழற்றி எறிந்தாள். நமது கற்பைப் பாதுகாக்கப் புருஷன் கடமைப் பட்டவர். நம்மை யொருநாளும் கைவிடார். ராவணனை ஹதம் செய்வார். நாம் உயிரை விட்டால் அது குலஸ்திரீயின் தர்மமாகாது. நாம் இராமரிடத்தில் தெரிவித்த பிறகன்றோ உயிரைத் துறக்க வேண்டு மென்று தனது பிராணனை விடாது வைத்துக் கொண்டாள்.

இன்னொரு விஷயத்தையும் எடுத்துக் காட்டலாம்: ஹநுமார் இலங் கையில் சீதாதேவியைக் கண்ட இடத்தில், தமது புஜத்தில் ஏறிக்கொள்ளும் படியும், தாம் இராமரிடம் கொண்டுபோய் விட்டுவிடுவதாயும் தெரிவிக்க, அதற்குச் சீதை சாமான்ய ஸ்திரீயாயிருந்தால் உடனே இணங்கி யிருக்கக் கூடும். மானமே பூஷணமாகக் கொண்ட உத்தமி யாதலின் தன் சத்து ருவைப் பழிக்குப்பழி வாங்கியபிறகே தான் இலங்கையினின்றும் வெளி யேற வேண்டுமென்று தீர்மானித்து எல்லாக் கஷ்டங்களையும் ஸகிக்கத் துணிந்தாள். தான் ஹநுமானுடன் வந்துவிடுவது தன் பர்த்தாவினுடைய பராக்கிரமத்துக்குப் பங்கமாகுமென்றும், இராமரின் மனைவியை ஒரு குரங்கு மீட்டு வந்ததென்ற பழிச்சொல் உலகமுள்ளளவும் ஏற்படுமென்றும் ஊகித்து ஹனுமானுடைய வேண்டுதலைச் சீதை மறுத்துவிட்டாள். சத்துருபாவனையி லில்லாவிடினும், நிஷ்களங்கமான பரிசுத்த பாவனையிலுங்கூட ஆடவனா யுள்ள ஒருவன் ஒரு ஸ்திரீயைத் தொடுவது தர்மமாகாதென்று சீதை

தெரிவித்தாள், இதனால் என்ன ஏற்படுகிறது? அவ்வம்மை உத்தமியா யிருந்ததாலன்றோ சத்துருவின் ஹதத்தின்பொருட்டே ராமஸ்மரணை செய்து இராமாமிருதத்தைப் பானம் செய்துகொண்டு தன் உயிரை விடாதவாறு காப்பாற்றியபடி பிராணனோடு பத்துமாதமும் காத்திருந் தாள். ஆகையால், ஒவ்வொரு குல ஸ்திரீயும் தன் கற்புக்குப் பழுது வரும் காலத்தில் தன் பர்த்தாவினிடத்தில் தெரிவிப்பதே முதற் கடமையென்று இதனால் நன்கு விளங்குகிறது. இப்பொழுது நான்கு கேள்விகளுக்கும் நமக்குத் தெரிந்தவரையில் சமாதானம் சொன்னோம். தவிர, சீதை மஹா பதிவிரதை யென்று ஹனுமான் முதலியவர்கள் சொன்னதும் போதா மல், முப்பத்து முக்கோடி தேவதைகளும் வந்து சொன்னார்கள். அதுவும் போதாமல் இறந்துபோன பிதாவாகிய தசரதரும் வந்து சொன்னார். ஆகை யால் அவ்வம்மை உத்தமியென்பதற்குச் சந்தேகமேயில்லை.

இன்னும் குசலவ சரித்திரத்தில் தன் குமாரனுக்கு என்ன நேர்ந்ததோ வென்று சீதாதேவி கலங்கி அம்பும் வில்லும் கொடுத்து, தான் பதிவிரதா ரத்நமாகில் இது அனைவரையும் ஜெயித்து வரட்டுமென்று சொல்லி யனுப்பினாள். அந்த ஒரு சொல் பராக்கிரமம் மிகுந்த ராமர் முதலியோரனைவரையும் தோல்வியுறச் செய்து விட்டது. அவ்வாறு இல்லா விடின் சீதையின் சொல்லுக்கும் கற்புக்கும் அபக்கியாதி நேருமன்றோ? இராமபிரான் சமுத்திரம் போன்ற வானர சைந்யங்களுடனும் சென்று ராவணனை ஹதம் செய்தார். சீதையோ தன்னொரு சொல்லால் அனைவரை யும் வெற்றிகொண்டாள். பின் விவரமுணர்ந்து தன் சொல்லின் விபரீதம் நோக்கிக் கதறவே, வான்மீக முனிவர் பிராப்தமாகி சமாதானமும் சாந்தி யும் உண்டுபண்ணினார். இதனாலும் சீதாமணியின் பதிவிரதா மஹாத்மியம் நன்கு பிரகாஸமாகும்.

ஸ்ரீராமபிரான் கணவனது கடமையைச் சரியாகச் செய்யவில்லை யென்று தர்க்கத்தில் மூன்று உதாரணங்கள் அதற்கு அநுசரணையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதற்கு நாம் அடுத்த பத்திரிகையில் எம்மால் இயன்றளவு கூறி, இராமபிரானைவிட வேறு அன்புள்ள கணவன் ஒருவரு மிருக்க முடியாதென்று நிரூபிப்போம்.

வெவ்வேறு மனம்.

உன்னை அவர்கள் வெகு பிரீதியுடன் நடத் தலாம், பேசலாம்—அவ்வளவுக்கு மட்டுமே தான் அந்த மனதால் முடியும்.

தன் மக்களை விட உன்னை அதிகமாகக் கவனித்து வருவதாய் அவர்கள் வாயால் பேசலாம். மனதால் அப்படி நினைக்கவோ, செய்கையில் அவ்விதம் காண்பிக்கவோ ஒருபோதும் முடியாது. அது வேறு மனது ஆகும்.

பழமொழிக் குறிப்புகள்

1. அன்பு.

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

18. அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி.

"அன்பு"—என்பது பரமோத்கிருஷ்டமான வஸ்து. உலகமே அன்பால்தான் கட்டுப்பட்டிருக்கின்றது. அன்பு என்பது இல்லையாயின் பிரபஞ்சமே யில்லை. இத்தகைய உயரிய அன்பு கெட்டுப்போய் விஷமிக்கும்போது மகா பொல்லாங்கான பயங்கர வஸ்துவாய் மாறிப் போய்விடுகின்றது. அதிலிருந்து தோன்றும் சத்துருத்வம்—கொடிய சிந்தனை—துரோக நினைவு — ஆத்திர வுள்ளம் — இன்னதைத்தான் புரியுமென்று சொல்வதற்கில்லை. எந்த நிமிஷத்தில் எந்த கொடுமையைச் செய்து விடுமோ வென்று எவரும் அஞ்சிப் பின்னடைய வேண்டியதே. அன்பு விஷமித்துப் போவதற்குப் பல காரணங்கள் உண்டு. தான் ஓரிடத்தில் வைத்த அன்பு போல், அந்த இடத்திலும் தன் மீது அன்பு வைத்திருப்பதாக நெடுநாள்வரை நம்பிக் கொண்டிருந்துவிட்டு, பிறகு, தான் வைத்த மாதிரியில் அவர்கள் தன்னிடம் அன்பை உணர்த்திக்கொள்ளாமல் பாசாங்கு காட்டி ஒப்பாரித் தன்மையாகப் போலி உறவாடி நடந்து கொண்டார்களென்று தெரியவரும்போது, முன் வைத்த அவ்வளவு அன்பும் கெட்டு ஆத்திர சிந்தையிலும் ஏமாற்றத்தாலுண்டான துயரத்திலும் மூழ்கிப் பாழ்பட்டு விடுகின்றது. இதிலிருந்து உண்டாகும் புண்ணை யாற்றுவது வெகு கஷ்டமாக முடிவதில், அதன் பயனாக விரோதம் — பிளவு—மனக்கசப்பு முதலியனவும் சம்பவிக்கின்றன. அன்பின் காரணமாகத் தான் பிறர்க்குப் பலவகையிலும் செலவழித்திருக்க, அவ்வளவையும் பெற்றுக்கொண்ட அவர்களோ தனது விசேஷ காலங்களுக்கு வந்திருந்து பதிலுக்குப் பதில் செய்யாமல் ஜாடையாக ஒதுங்கிக்கொள்ளும்போது அதிலிருந்தும் அன்பு கெட்டுவிடுகின்றது. ஏழைகள் பணக்காரர்களின் வீட்டில் அன்பு வைக்கப் போக, அந்தப் பணச்செருக்கு மிகுந்தவர்களோ இந்த ஏழைகளை அதற்குத் தகுந்த அன்பாய் ஆதரணை செய்யாமல், தங்களுக்குச் சமானமல்லாத கடைப்பட்ட ஏழைகளென்றும் அன்னியர்களென்றும் ஒதுக்கித் தள்ளும் போதும் அந்த இடத்திலுண்டான அன்பு கெட்டுவிடுகின்றது. இவ்வாறு அன்பு கெடுதற்கும், அது விஷமித்துப் பொல்லாங்காய் முடிந்து விடுவதற்கும் அநேக திருஷ்டாந்தங்கள் உலகில் தென்படலாம்.

அங்ஙனமாக, ஒரு உடன்பிறப்புகளாகிய அண்ணன் - தம்பிகள் இருவரும் சென்மப் பகையாளிகளாக முடிவதும், அன்பு மேற்சொன்னபடி விஷமித்துப்போகும் காரணத்தால் தான். உடன் பிறப்பு என்பது பெரிய வரன். கடவுளே அன்பு கூர்ந்து பிரஸாதித்த மகா பாக்கியம். அவரே அமைத்த உறவு. அவரே ஒன்று கூட்டிய தொடர்பு. ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவே அப் பரம்பொருள் உடன்பிறப்பு என்பதை உண்டாக்கினர். இத்தகைய அரிய பாக்கியம் மனிதர்களின் மடமையால்

பாழ்த்து விஷமித்துப் போவதெனில் அது எத்தனைத் துக்ககரம்? ஏன் அப்படி யாகின்றது? அதற்கு முதல்காரணம் தாய்தந்தையர்களே. சிறு பிராயத்திலேயே ஒருவனுக்கு ஒருவிதமாயும், மற்றொருவனுக்கு ஒருவித மாயும் கொடுத்தும் நடப்பித்தும் பரஸ்பரம் பொறாமைக் குணங்கள் உண் டாகச் செய்வித்து விடுகிறார்கள். இருவருக்குள்ளும் அண்ணன் தம்பி என்ற மரியாதைக் கிரமப்படி நடந்துகொள்ளும்படி செய்யாமல் மிதமீற வைத்து விடுகிறார்கள். அண்ணனைத் தம்பி ‘அடா’ என்று அழைக்கின் றான். இது முளைக்கும் முளையிலேயே தோன்றும் கெடுதிகள். அண் ணன் தம்பிகளுக்குள் பரஸ்பரம் அன்பு பெருகவும், அவர்கள் எக்காலத்தி லும் அன்னியோன்னியமாய் இருந்து வாழவும் அதற்கேற்ற விதமாகப் பெற்றோர்கள் விசேஷ கவனத்துடன் அவர்களை வளர்த்துச் சரி செய்ய வேண்டும். இதில் அலக்ஷியமா யிருந்துவிடும் தன்மையானது பிற்காலத் தில் அண்ணன் தம்பிகள் இருவரையும் அன்பு கெட்டுச் சத்துருக்களாகும் படி செய்துவிடுகிறது.

பெற்றோர்களின் வளர்ப்பினுடைய குற்றத்துக்குப் பிறகு, இந்த அண்ணன் தம்பிகளுக்கு அமையும் பத்தினிமார்களின் குணவிசேஷங்க ளுக்கேற்ப அன்பும், ஒற்றுமையும், பிரிவினையும், பகைமையும் நேர்கின்றன. உயர்வு தாழ்வான பரஸ்பர பேத நிலையும் பகைமைக்கு வித்தாகின்றன. அண்ணன் தம்பிக்கு எவ்வளவோ நன்மைகள் செய்கிறான். காலமுழுதும் அவனுக்கு உழைக்கின்றான். அதற்குத் தம்பி அண்ணன்மீது விஸ்வாச மாக இருக்க வேண்டியது கிரமமாக இருக்க, அதற்குப் பதிலாகத் தம்பி, தனது அண்ணனுக்குக் குழந்தைகள் இல்லாமல் இருப்பதைத் தனக்குப் பெரிய பாக்கியமாக நினைத்துக்கொண்டு, எப்போது அண்ணன் சாவான், அவன் சொத்துக்கள் எப்போது தன்னைச் சேரும் என்று துரோக நினைவு நினைக்கின்றான். எங்கு அண்ணனுக்குக் குழந்தைகள் உண்டாய்விடுமோ வென்று கவலைப்பட்டு, சாமி! என் அண்ணன் இப்படியே குழந்தைகள் இல்லாமல் சாகட்டும் என்று கடவுளை வேண்டுகிறான், இது அண்ணனுக் குத் தம்பி செய்கிற கடமையாகுமா?

இவ்விதமே அண்ணன் தன் தம்பிக்கு வரவேண்டிய தந்தையின் பாகத்தை யெல்லாம் தானே விழுங்கி விட்டு நடுத்தெருவில் அவனை விட்டு விடுகிறான். அண்ணனுக்கு மக்கட்பேறு இல்லாதிருந்து இறந்துவிட்டால், அவன் சொத்துக்களைத் தம்பி தன் வசம் செய்துகொண்டு தமயன் மனை வியை வீட்டை விட்டுத் துரத்திவிடுகிறான். இப்படியே தம்பி புத்திரப் பேறின்றி மடிந்தால், அவன் சொத்துக்களை அண்ணன் அபகரித்துக் கொண்டு அவன் மனைவியை வீட்டைவிட்டு ஓட்டிவிடுகிறான். இதைப் போல ஆயிரம் சங்கதிகளை விரிவாகச் சொல்லலாம்.

ஆகவே, அண்ணன் தம்பிகள் சென்மப் பகையாளிகள் ஆவதற்கு முதலாவது பெற்றோர்களும் அவர்களின் வளர்ப்பும் காரணங்களாக அமை கின்றன. இரண்டாவது, அண்ணன் தம்பிகளுக்குள் அமையும் மனைவி மார்களின் குணப்போக்குகள் துணைக் கருவியாய் நேர்கின்றன. மூன் றாவதாக, ஒருவர் பாடுபட்டுச் சேர்த்த சொத்துக்களை மற்றவர் கஷ்ட மில்லாமல் அபகரிக்கொண்டு தனதாக்கிக்கொள்ள இந்த உடன்பிறப்பு

இடம் தருவதால் சென்மப் பகை முற்றுவதற்குச் சொத்துக்களும் பாகம்—பங்குகளும் ஒரு பெரிய காரணமாய் மூட்டிக் கொள்கின்றன. நான்காவதாக, ஒருவர் அன்பு வைத்து, மற்றவர் அன்பு வைக்காமற் போய், அதிலிருந்தும் உண்மையும் உத்தம நடையும் கெட்டு அன்பு விஷமித்து அவ்வழியாகவும் சென்மப் பகை நேருகின்றது. ஆக இந்த நான்கு காரணங்களாலும் பகை சூழ்கின்றமையால் "அண்ணன் தம்பிதான் சென்மப் பகையாளி" என்ற பழமொழியும் உலகில் சரியாகவே நிறைவேறுகிறதென்றுதான் சொல்ல வேண்டும். "உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்—உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்ற பாடலையும் இந்த சந்தர்ப்பத்தில் துணையாக எடுத்துக் கொள்ளலாம்.

(தொடர்ந்து வரும்.)

உலகம் அப்படித்தான் இருக்கிறது!

உழைத்துப் பாடுபடும் மகன்மீது உள்ளன்பே இல்லை. அவன் மனைவி மீதோ கடும் துவேஷம்!

உட்கார்ந்து சோம்பேரியாய் உண்ணும் இளைய மகனிடமே பிராணவாஞ்சை. அவன் மனைவியோ தன்னுடைய வெகு பிரியமான மருமகள்!

குமாரன் தன் தாயாருக்கென்று தரும் பணத்தை அந்தத் தாய் தின்பதில்லை. அவளுடைய இளைய மகன் வகையாரும், அவளுடைய பெண்ணும், அப்பெண்ணின் பிள்ளைகளுமே பங்கிட்டுக் கொள்கிறார்கள். உழைக்கும் புத்திரனுக்கு நல்ல பேருமில்லை, அவன் பணம் அவன் தாயால் அநுபவிக்கப்படுவதுமில்லை.

ஒரு ராஜ்யத்தில் தனிகர்கள் பெருகலாம் அல்லது குறையலாம். உழுது பயிரிடும் குடிகள் குறைந்தால் ராஜ்யத்தின் பெருமையும் அழகும் குறையும். குடியானவர்களே தேசத்துக்கு முக்கிய அங்கத்தினர், அதற்குப் பிறகே செல்வந்தர்களும் அவர்களுடைய மோட்டார்களுமாம்.

செனிபில்டர்
ஒர்க்ஸ்
டிராயிங் புஸ்தகம்

செனிபில்டர் ஓர்க்ஸ்

டிராயிங் புஸ்தகம்.

கவர்ன்மெண்ட் டெக்னிகல் பரிட்சைக்குப் போகும் லோயர் ஐயர் கிரேட் மாணவர்களுக்குப் பிரயோசன முள்ள பிரி ஆண்டு டிராயிங் புஸ்தகம்

பார்ட் I. ஆர்ன் மெண்ட்

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை டிராயிங் மாஸ்டருக்கு	ரூபாய்	1—0—0
மற்றவர்களுக்கு	,,	1—8—0

தபால் சார்ஜ் பிரத்யேகம்.

செனிபில்டர் ஓர்க்ஸ்

லித்தோகிராபர்ஸ், கலர்பிரிண்டர்ஸ்.

40, வெங்கடேசகிராமணி தெரு,

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

நவராத்திரி விரதம்

நவராத்திரி யென்பது புரட்டாசி மாதம் பூர்வ பக்ஷம் பிரதிமை திதி முதற் கொண்டு நவமி வரையிலுள்ள ஒன்பது தினங்களுக்குப் பெயர். இக்காலங்களில் பராசக்தியாகிய பரமேச்வரியைக் குறித்து விசேஷ ஜெபதபங்கள், தர்ப்பணங்கள், பூஜைகள், ஆகுதிகள், சந்தர்ப்பணைகள் முதலிய இவைகள் யாவும் நூன்முறைமைப்படியே நடத்தி வருகிறவர்களுக்கு இஷ்ட சித்திகளும், சகல சாம்ராஜ்யங்களும் பரமேச்வரியினால் வெகு சீக்கிரத்தில் கடாக்ஷிக்கப்படும். முக்கியமாய் இந்த நவராத்திரி தினங்களில் ஸ்ரீ வித்யா உபாஸகர்கள் உபாஸனை செய்தால் மந்திரசித்தி யடைவார்கள். மேலும் இக்காலங்களில் தானே சகலவிதமான மந்திர உப நிஷத்துகள், புராணங்கள், தோத்திரங்கள், ஜெபங்கள், பாராயணங்கள் செய்து வந்தால் விரைவில் இஷ்ட சித்தியாம். துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி இம் மூவர்களையும் மும்மூன்று தினமாக ஒன்பது தினமும் இராக்காலங்களில் பூசிப்பது மகா விசேஷமானதினால் இதற்கு நவராத்திரி என்று பெயர் வழங்கி வருகிறது. இந்த ஒன்பது நாட்களும் பூஜை செய்யத் தவறினாலும், கடைசித் தினமாகிய நவமியன்றைக்கு வித்யா பீடமாகிய புஸ்தகங்களை வைத்து துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி இம்மூவர்களையும் விதிப்படி பூசித்தல் கிரமம்.

அவ்வாறு பூசிப்பதால் அத்தினத்திற்கு "மகாநவமி" என்றும், சரஸ்வதியைப் பூசிப்பதால் "சரஸ்வதி பூஜை" என்றும், ஆயுதங்களை வைத்துப் பூஜிக்கிறதினால் "ஆயுத பூஜை" என்றும் சொல்லப்படுகிறது. மறுநாள் தசமி திதிக்கு "விஜயதசமி" என்று பெயர். அன்றைக்குத் தான் நூதன வித்யாரம்பம், அஸ்திர சஸ்திர வித்தை யறிந்தவர்கள் ஆயுத மெடுத்து விளையாடல், வாசித்தோர் கிரந்தங்களை வாசித்தல் முதலியவற்றை முக்கியமாகச் செய்வார்கள். இதனால் காரியசித்தி யென்று பெரியோரும் கூறுகின்றனர்.

சுக ஜீவியம்

வாலிபன் :—என் தேகத்தைச் சிரமப்படுத்தி அதனால் என் வயிற்றுக்கு உணவு தேடும்படியான தொந்தரை எனக்கு வேண்டாம். நான் சுகஜீவியாய் கஷ்டப்படாமல் உண்டு உடுத்து வாழ ஒரு வழி சொல்லுங்கள்.

பாதிரியார் :—உழைப்பவனே உலகத்தில் இருக்கவும் வாழவும் தக்கவன். உழைக்காமல் வீட்டில் இருந்து உண்ண நினைப்பவன் உலகத்துக்குப் பாரமே யாவான். அத்தகையோருக்குச் சுகமான இடம் 'சவப்பெட்டி' யில் போய் உட்கார்ந்துகொண்டு தன்னை மூடிக்கொள்வதே.

பெண்கள் பக்கம்

விலகி நிற்கும் பான்மை

கணவன் :—என்ன இப்படித் தூங்குகிறாய்? தாயார் தேள் கொட்டி அலறிக்கொண் டிருக்கிறாள். நீ நிர் விசாரமாய்ப் படுத்திருக்கிறாயே? இது தெய்வத்துக்குப் பொறுக்குமா? உள்ளுக்குள் அன்பு இல்லாமற் போனாலும் ஊர் மெச்சவாவது, என் மானம் கெடாதிருக்கவாவது பக்கத்தில் வந்து நிற்கக்கூடாதா? இதெல்லாம் வீண் போகாது. கடைசியில் சுமக்கவேண்டிய பாவமூட்டை என்னவோ இருக்கவே இருக்கிறது.

மனைவி :—அந்த அம்மாளுக்குத் தேள் கடித்தால் நான் என்ன செய்யட்டும்? இதென்ன இப்படி என்னைப் பிடுங்கி விடுகிறீர்கள். எப்போது பார்த்தாலும் இந்த வெடு வெடா? நான் பக்கத்தில் வந்து நின்றால் தேள் கடி இறங்கிப்போமா?

கணவன் :—உன் தாயாருக்காவது உன்னைச் சேர்ந்தவர்களில் எவருக்காவது இப்படிக் கடித்தால் நீ இப்படி எனக்கென்ன வென்று தூங்கிக் கொண்டிருப்பாயா? அந்தப் பரபரப்பை இதில் காணோமே? என் நெஞ்சை இவ்வாறு நோக வைத்து நீ அடையும் லாபமென்னவோ?

***

பெண்மணியே! நீ எதற்காக விவாகம் செய்து கொண்டாய்? எதன் பொருட்டு உன்னுடன் ஒரு ஆடவனை உன் பந்துக்கள் சேர்த்து வைத்தார்கள்? அத்தனைப் பொருள் விரயமும், அவ்வளவு கனத்த ஆசீர்வாதங்களும் அந்தச் சமயம் ஏன் செய்யப்பட்டன? இந்த மாதிரி நாயும் பூனையுமாக நீங்கள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டிருப்பதற்கா? மாங்கல்ய பாக்கியம் சுலபத்தில் கிடைக்கக் கூடியதா? அது இல்லாமல் எத்தனை பேர் கதறுகிறார்கள்? எவ்வளவு பெண்களுடைய வாழ்க்கை பாழாகி மண்ணாகிக் குட்டிச் சுவராய்ப் போயின? உன் கணவனுக்கு ஹிதகரமாக நீ நடந்து கொள்வது உனக்குக் கஷ்டமா யிருந்தால், அதைவிட நீ பெண் ஜென்மமே எடுக்காமல் இருந்திருக்கலாமே? உன் தாயார் வீட்டிலேயே, விவாகம் வேண்டாமென்று வெறுத்து, தனித்து நின்றிருந்தால் உனக்கும் இவ்வளவு பாடில்லையே? கணவனாகவும் உனக்கென்று ஒருவன் ஏற்பட்டிரான்; எவ்விதத் தொந்திரவும் உனக்கு இருந்திராது. எந்தக் கஷ்டமும் நீ எவருக்கும் படத் தேவை யில்லாதிருந்திருக்குமே! மகாராஜியாக, மகா சுகவாசியாக, உன் தாய் வீட்டில் உட்கார்ந்து கொண்டு, உன் தாயார் பொற் கிண்ணத்திலிருந்து பாலன்னம் எடுத்து உன் வாயில் ஊட்ட, நீ திண்டுமேல் சாய்ந்துகொண்டு சுகமாய்ப் புசித்து உல்லாஸமாய் வீற்றிருக்கலாமே? அப்படியிருக்க ஏன் விவாகம் செய்து கொண்டாய்? செய்து கொண்டு புருஷனுடன் அந்நியோன்னியமாய் இராமல் இப்படிக் கலகப்பட்டுக் கொண்டு வேற்று மனது ஏன் ஆகிறாய்? ஏனோ பிரிந்து நிற்கிறாய்? எவருக்கு வந்த நோவோ வென்று ஏன் பேதம் எண்ணுகிறாய்? நீ வாழ்வு நடத்த வந்த வீட்டில் இந்தத் தாழ்வு அலங்கோலங்கள், புருஷனின் மனத்

துடிப்புகள், கண்ராவிகள், நாலு வீட்டார்களும் உன்னைப் பார்த்து நகை யாடும் சங்கதிகள் ஏன் நடக்க நீ வைத்துக் கொள்கிறாய்? வலிய உன்னைத் தேடி வந்த இந்த வாழ்வை ஏன் இப்படி வீணாக்கிக் கொள்கிறாய்?

உனக்கு இவ்வளவு கௌரவமும் கிடைப்பது யாரால் தெரியுமா? யார் இருப்பதால் தெரியுமா? எவரால் உண்டானது தெரியுமா? எல்லாம் உன் கணவனால் தான். நீ கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாயென்று உன் தாய் வீட்டார் உன்மேல் மதிப்பு வைத்து உன்னைக் கௌரவித்திருக் கிறார்களே தவிர, உன் கணவனை நீ எதிர்த்துக் கொண்டு நாலுநாள் உன் தாய் வீட்டில் போய் இரு. அந்தச் சமயம் உன் கணவனும் இவளால் படும் பாடு போதும் போதுமென்று எங்கேயாவது வெளி நாட்டுக்குப் போய் விடட்டும். அப்போது பார், உனக்கு நடக்கிற மரியாதையின் தன்மைகளை. நீ உன் தாயார் வீட்டுக்கு வந்த முதல் இரண்டு நாள் உன் மனதுக்குப் பிடித்தமானதாய் ஹிதமாய் இருக்கக்கூடிய சொற்களையே உன் தாயும் தந்தையும் சொல்லுவார்கள். அதற் கப்பால் அவர்களின் நெஞ்சிலே, ஐயோ நமது பெண் வாழா வெட்டியாய், வடபத்திர காளியாய், புருஷ னோடு எதிர்த்துக் கொண்டு இப்படி ஊர் சிரிக்க, உலகம் சிரிக்க, சந்தி சிரிக்க நம் வீடுவந்து விட்டாளே? இதற்காகவா அவ்வளவு செலவுசெய்து கட்டிக் கொடுத்தது? என்று வேதனைகள் தொடங்கிக் கொள்ளும். உன்னைப் பார்க்கிற எந்தப் பெண்ணும், சீ, இவளும் ஒரு பெண் ஜென்மமா? கணவ னுடன் சண்டையிட்டு விட்டு இங்கு எவருடன் பேச வந்திருக்கிறாள்? பெண் கட்டையாகப் பிறந்த பிறகு, அந்தக் கட்டைக்கு மஞ்சள் பூசப் பாக்கி யம் தருகிற பர்த்தாவுக்கு அடங்கி நடந்தல்லவா நல்ல பெயர் எடுக்க வேண்டும். ஐயோ! அம்மா, இவளுடன் சேர்ந்தாலே மோசம், பேசினா லும் புத்தி கெட்டுப் போகும், எனக்கு இந்த மாதிரி வந்து விடிய வேண்டா மம்மா என்று ஒதுங்கிப் போவார்களே தவிர, உன்னுடன் நேசித்துப் பேச மாட்டார்கள். அப்படி ஒரு சமயம் உன்னுடன் பேசினாலும் அது வெளிக் குப் பேசியதே தவிர, உள்ளுக்கு உன்னை இகழும் இகழ்வு இத்தனை யென்று உனக்குத் தெரியுமா?

ஆயிற்று, நீ தாய் வீடுவந்து ஆறு நாட்கள் கடந்துபோய் விட்டன. நீ வேளைக்கு வேளை தின்றுவிட்டு திம்மென்று உட்கார்ந்து கொண்டு ஊர் சங்கதிகள் பேசிக் கொண்டு வெற்றிலைப் பாக்கும் தட்டுமாய் இருக்கிறாய். ஏழாம் நாள் எங்கிருந்தோ ஒரு சங்கதி வருகிறது. உன் கணவன் வீட்டை விட்டு வெளியேறி இரங்கூன், சிங்கப்பூர், பினாங்கு போய்விட்டா னென் றும், எப்போது திரும்பி வருவானோ தெரியாதென்றும் சங்கதி எட்டுகிறது. உன் பெற்றோர்களின் நெஞ்சை அப்போது தட்டிக் கேள். அப்போது அவர்கள் படும் விசாரம், நீ ஒரு பெண்ணைப் பெற்று அவள் வாழாவெட்டி யாய் உன் வீட்டுக்கு வந்து குந்தினால் தான் உனக்குத் தெரியும்? ஐயோ! நமது பெண் வாழாமல் போய்விட்டதே யென்று உன் பெற்றோர்கள் ஆ என்று பெருமூச்சுடன் வாய் திறக்கும்போதே அவர்களின் பிராணனும் ஆகாசத்தில் சேர்ந்துகொள்ள எட்டிப் பார்த்துக் கிட்டிச்சேர முட்டிமுட்டி முயல்கிறது. போன கணவன் திரும்பிவந்த பின்புதானே உனக்கு வாழ்வு? அவன் வராவிட்டால் உன் கதியென்ன? போனவன் போய் மடிந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டிருக்க, அது தெரியாமல், வருவார் வரு

வார் என்று மஞ்சள் குங்குமத்தோடும் காத்து நிற்கும் பெண்களின் பரிதாபச் செய்திகள் உலகத்தில் எத்தனையென்று உனக்குத் தெரியுமா?

உன் கணவன் வெளிநாடு போனபின்பு, அப்பால் உன் தாயார் வீட்டில் நடக்கிற மரியாதைகளைப் பார். நீ மெச்சிக் கொண்ட தாயார் வீடு உன்னை இப்போது வாழாவெட்டி என்று இகழத் தொடங்கிக் கொள்கிறது. உன் கணவன் வீட்டில் வேலை செய்ய மகா அலுத்துப் போன மாதிரி பிணங்கிக் கொண்டாயே? அந்த மாதிரி உன் தாயார் வீட்டில் செய்கிறது தானே? எத்தனை நாளைக்கு இப்படிப் பிணங்கி நிற்க முடியும்? பெண்ணாய்ப் பிறந்தவள் வீட்டு வேலை செய்யச் சோம்பலாமா? தனக்கென்று ஏற்பட்ட கணவன் வீட்டில் வேலை செய்வது என்ன ஒரு கஷ்டமா? ஆடவர்கள் அன்னிய மனிதர்களிடம் காலை முதல் மாலை வரை உழைத்து ஆயாசத்துடன் வீடு சேரவில்லையா? அப்படி அவர்கள் உழைக்கிறதினால் தானே சோறு! நீ அப்படி யாரிடம் உழைத்து நொந்து போனாய்? எவ்வளவோ சந்தோஷமாய் உன் கணவன் வீட்டில் செய்யவேண்டிய வேலைகளுக்கு மறுத்த நீ அந்தவிதம் உன் தாய் வீட்டில் இருக்க, மறுக்க முடிகிறதா வென்று பார்? முடியுமா?—எப்படி முடியும்? மறு தினமே தாயாருக்கு உள்ளுக்குள்ளாகவாவது மன மொடிந்து போகாதா? என்ன நமது மகள் இப்படியானாள் என்று கண்ணீர் விடாளா? இதுவெல்லாம் பெண் தன்மைக்கு ஒழுங்கான முறைகளாகுமா? கடைசியில் நீ உன் தாய் வீட்டில் வேலை செய்யவே வரும் என்பதை மறவாதே. திண்டில் சாய்ந்திருக்க முடியாது. அது நீ வந்த முதல் நாள்—அதன்மேல் இரண்டு நாள் நடக்கும் சங்கதி. பிறகு நீ உழைக்கத் தொடங்க வேண்டியதே. உழைப்பில்லாச் சோறு உப்பில்லாச்சோறு என்று நீ கேட்டதில்லையா?

உன் கணவன் திரும்பி வருவது எப்போதோ என்று ஆன பின்பு, நீ கணவனை ஓட்டிவிட்டவள் என்று பேர் பெறுவாய். உன் பாடுகள் பொறுக்காமலே அவன் பரதேசம் போனான் என்று உன் மாமி உன்னைச் சபிக்கிற சபிப்புகள் சொல்லி முடியுமா? உன் கணவன் வீட்டுக்கு நீ இப்போது போய்ப் பார்; உன்னை யார் சட்டைபண்ணுகிறார்கள்? உன்னிடம் யார் முகம் கொடுத்துப் பேசுகிறார்கள்? உன்னுடன் வெகு உறவு கொண்டாடிய எதிர் வீட்டுப் பக்கத்து வீட்டுப் பெண்களெல்லாம் உன்னைக் கண்டாலே பிடிக்காமல் வெறுத்து ஒதுங்குகிறதைப் பார்த்தாயா? அரை நாள் இருக்கட்டும், அரை நாழிகை அந்த வீட்டில் இருக்க முடிகிறதா? நீ பேசாமல் வெட்கம் கெட்டு உன் தாய் வீட்டுக்கு உடனே வந்து சேர வேண்டியது தான். சேர்ந்து என்ன செய்ய? மஞ்சள் குங்குமம் கணவன் வீட்டிலல்லவா இருக்கிறது? தாய் வீடு பிறந்த வீடு; வாழ்கிற வீடும், வாழ்வு தரும் வீடும், வாழ வைக்கிற வீடும், வாழ்க்கை நடத்துகிற வீடும், வாழ்வு காண்கிற வீடும் கணவன் வீடல்லவோ வீடு. அதைச் சொந்தமாகக் கொண்டவளல்லவோ மகாராசி. மற்றவள் சங்கதிகள் எல்லாம் சிச்சீ தானே.

தாய் வீட்டு மரியாதை நாலு நாளில் பறந்துவிடுகிறது. தாய் சிடுசிடுக்கிறாள். தந்தை வயிறு எரிந்து வெடு வெடுக்கிறான். எனக்கு ஏழு அண்ணன்கள் இருக்கிறார்கள், என்ன குறையென்று உன் கணவனிடம் டம்பம், வீம்புப் பேச்சு பேசினாயே? இப்போது முதல் அண்ணன் சங்கதியைக் கேள். அவனுக்கு மனைவி வருகிறமட்டும் உன் தாய் வீட்டில் நீ

போனபோதெல்லாம் அதிகாரம் சென்று கொண்டிருந்தது. உன் மனம் போல் செலவுகள் நடந்து, நீ வைத்த திட்டப்படி சமயற்கட்டில் யாவும் தயாராகிக் கொண்டிருந்தன. இப்போதோ உன் தாய்வீட்டுச் சமயல்கட்டு உனது அண்ணனுக்குப் புதிதாக வந்திருக்கிற உன் அண்ணிக்குச் சொந்தமாகப் போய்விட்டது. நீ ஏதாவது பாத்திரம் எடுத்துக் கிழே வைப்பதில் சப்தம் உண்டானால், உடனே உன் அண்ணன் மனைவியின் முகம் கோணுகிறது. இதென்ன கல கலவென்று சப்தம் என்கிறாள். இதென்ன அடிக்கடி கணவன் வீட்டிலிருந்து திரும்பி வந்து விடுகிறாள், வீண் செலவுகள் ஆகிறதே என்று கடு கடுக்கிறாள். உன்னை வாழா வெட்டி என்கிறாள். "அவளைப்போல நான் புருஷனோடு வாழாமல் வந்து குந்தியிருக்கவில்லை" என்கிறாள். ஹா! இது எப்படிப்பட்ட குத்துச் சொல்லான வார்த்தை பார்த்தாயா? இதை இந்தப் புதியவள் வாயிலிருந்து கேட்பதைவிடப் பிராணனை விடலாமே? இந்த மானம் கெட்ட வாழ்வை தாய் வீட்டிலிருந்து கொண்டு வாழ்வதிலும், சொந்தமான அருமைக் கணவனோடு பாதி வயிறு கூழ் குடித்துக்கொண்டு நானே ராணி, என் கணவனே ராஜா என்று ஆநந்தமாய் இருக்கலாமே? எந்த நாயும் பேயும் எந்த ஒரு சொல்லும் சொல்ல முடியுமா? ஆகவே, பெண்ணே! நீ நன்றாக யோசி. தாய் வீட்டு வாழ்வு உன் வாழ்வு அல்ல. உன் கணவன் வீட்டு வாழ்வே உன் வாழ்வு. அவனை நோக வைக்காமல் அவன் மனம் மகிழ நடந்துகொண்டு அவனைச் சேர்ந்தவர்களை உன்னைச் சேர்ந்தவர்களாக எண்ணி, நல்ல பெண்ணாய், உத்தமியாய் யாவரும் புகழ நல்ல வாழ்வு வாழ்ந்திடுவாயாக. உன் கணவனே உன் பெரும் பாக்கியம். நீயே நன்றாக யோசித்துப் பார். அப்போது "ஆநந்த குண போதினி" சொல்வது அவ்வளவும் உண்மையே, அநுபவந்தான் என்பதும் உனக்கே தெரியவரும்.

இவர்களை வரவொட்டாதபடி தடுத்துவிடுக.

சில பெண்கள் வீட்டு ஸ்திரீகளிடம் வந்து, ரகசியமாய் இந்த கல்லிழைத்த பில்லை வெகு நன்றாயிருக்கிறது ; உன் குழந்தைக்கு அதை வைத்து ஜடை போட்டால் அழகாயிருக்கும் ; நயமான விலைக்கு வந்திருக்கிறது ; நகை பத்து நபா மதிப்பு ; நான் எட்டு நபாய்க்குத் தருகிறேன். உன் வீட்டுக்காரரைக் கேள் என்று தூண்டி விடுவர். அதில் வீட்டு ஸ்திரீகள் மயங்கி தங்கள் கணவர்களிடம் அந்த நகையை வாங்கும்படி தொந்தரை புரிவர். புருஷர்கள் முடியாதென்றால் இப்பெண்மணிகள் முகம் கோணி அகம் வேறவர். இவ்விதமான 'வியாபாரப் பெண்களை' உன் வீட்டுக்குள் வரவொட்டாதபடி செய். இனிமேல் இந்த மாதிரி நகைகளை வீட்டுப் பெண்களிடம் காட்டிப் 'பேரம்' செய்ய வாராதே என்றும் கண்டித்துச் சொல்லிவிடு. இந்த வியாபாரம் மிக்க மோசகரமானது, நல்லது மல்ல. இந்த சகவாசமே வேண்டாம்.

பிரபஞ்ச தரிசனம்

ஹிந்துக்கள் இதர தேசத்தார்களைப் போல் இராஜாங்க விஷயங்களை அதிகமாகக் கவனித்து வந்ததில்லை. அவர்களுடைய எண்ணத்தில் இவ்வுலக இன்பம் அற்பமென்றும், மோக்ஷம் அடைவதே மேலென்றும் நன்ருய்ப் பதிந்திருந்தது. முற்காலத்திலிருந்த பெரியோர்கள் அனைவரும் வேதாந்த கிரந்தங்களையே அதிகமாய் எழுதி வைத்துச் சென்றனர். சாமான்யர்களுக்கு அவைகளின் அர்த்தம் தெரிவது அருமையாயினும், அவைகளெல்லாம் மோக்ஷத்துக்கு வேண்டிய மார்க்கத்தைக் கூறுகின்றன வென்பது நன்ருய்த் தெரியும். மோக்ஷத்தையடைய வேண்டியவன் தேகாபிமானத்தை விட்டு விடவேண்டு மென்றும், ஆத்மாநந்தத்தையே நாடவேண்டு மென்றும் மேற்படி கிரந்தங்களிற் கூறியிருக்கிறபடியால், முற்காலத்தில் க்ஷத்திரியர்களைத் தவிர மற்ற வருணத்தார்கள் மதப் பற்றுள்ளவர்களாய் ராஜாங்க விஷயங்களைக் கவனியாமல் அவரவர்களுக்குச் சென்று ஏற்படுத்தப் பட்டிருக்கிற தர்மங்களை மட்டும் செய்து கொண்டு வந்தார்கள்.

***

பிராமணன் பிராத ஸ்நாநம் செய்தும், யாகாதி கருமங்களை யநுஷ்டித்து, வேத விசாரணை செய்தும்வந்தான். வைசியன் தனக்குரிய கொள்ளல், விற்றல் ஆகிய வியாபாரத்தை மட்டும் கவனித்து வந்தான். சூத்திரன் மேல் ஜாதியாருக்கு அடிமைத் தொழில் புரிந்து காலந்தள்ளினுன். க்ஷத்திரியன் மட்டும் ராஜாங்க விஷயத்தை யறிந்து சௌரியவானு யிருந்தான். பிறகு சில காலத்திற் கெல்லாம் இதர ஜாதியார் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது க்ஷத்திரியர்கள் மட்டுமே அவர்களுடன் எதிர்த்துச் சண்டை யிட்டார்கள். பிராமணர்கள் சண்டையைக் கவனியாமல் மடிஸஞ்சியைத் தோள் மேற் போட்டுக் கொண்டு ஸ்நாநம், ஜபம், தபம் முதலியன செய்யப் போய் மூக்கைப் பிடித்து மந்திரத்தை முணு முணுத்துக் கொண்டிருந்தார்கள்; வைசியர்கள் ஒரு காசுக்கு இரண்டு காசு லாபம் சம்பாதிக்க வேண்டி பணத்தில் மட்டும் திருஷ்டியுள்ளவர்களாய் வியாபாரம் செய்யப் போய்விட்டார்கள். சூத்திரர்கள் தங்களுக்குள்ள அடிமைத் தொழிலில் கிடந்தனர். ஒரு பெரிய தேசம் இப்படித் திக்கற்றுக் கிடந்தது! ஆதலின் படை யெடுத்து வந்த கிரேக்கருடன் சண்டை செய்தவர்கள் க்ஷத்திரிய வகுப்பினர் ஒருவரே. அவர்களுக்குள்ளும் அந்யோன்ய மில்லாதிருந்ததால் ஹிந்துக்கள் நாட்டை அயலாரிடம் தொலைக்கும்படி நேர்ந்தது. சில நாளைக் கெல்லாம் மகம்மதியர்கள் படையெடுத்து வரவே, அவர்களை ஜெயிக்க சக்தியற்றவர்களாய் அவர்களிடம் ராஜ்யத்தைக் கொடுத்து விட்டார்கள். கடைசியாக ஆங்கிலேயர் வந்த பின்பும் கூட, ஹிந்துக்களும் பிறரும் இராஜாங்க விஷயங்களைப் பற்றிக் கொஞ்சமேனும் கவனித்தவர்களல்ல. தஞ்சாவூர் சமஸ்தானம் தன் சுய அரசை இழந்து ஆங்கிலேயருடன் சேர்க்கப்பட்ட நாளில் ஒரு இந்தியரேனும் கண்ணீர் விட்டவர்களல்ல வென்று ஆங்கிலேயர் ஒருவரே கூறியிருக்கிருர்.

***

பிறகு இங்கிலீஷ் பள்ளிக்கூடங்கள் தோன்றத் தலைப்பட்டு, எல்லோரும் இங்கிலாந்து தேச சரித்திரத்தை வாசிக்க ஆரம்பிக்கவே, ராஜாங்க விஷயங்களில் அவர்களுக்கும் கொஞ்சம் சுதந்திரம் வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. அது முதல் காங்கிரஸ் முதலிய மகா ஜன சபைகள் கூட்டி அதில் பற்பல விஷயங்களைப் பற்றிப் பேசிவரத் தலைப்பட்டனர். இந்த உத்தம சிந்தை வரவரப் பெருகி ஓங்கியது. கடைசியில் இப்போதோ கக்ஷி பேதங்களிலும், ஒருவர் மனத்தை யொருவர் கெடுப்பதிலுமாக முட்டிக் கொண்டு, பிரதான லக்ஷியம் பிசகிப் போய்க் கிடக்கின்றது. சீக்கிரம் இவைகளுக்கு ஒரு முடிவு தோன்றுவதாக.

***

ஸிம்லாவைப் பற்றி நம் நேயர்களுக்குத் தெரியும். ஆதியில் யுவகனை ஒரு பிரிட்டிஷ் ஸர்தாரன் ஸிம்லாவில் வஸித்து வந்தான். இவனைப் பார்த்த மற்றவர்கள் வெயில் காலத்தில் அவவிடம் வாஸம் செய்தார்கள். 1827-ம் ஆண்டில் லார்ட் ஆம்ஹெர்ஸ்ட் கவர்னர் ஜெனரல் கோடைக்காக அவ்விடம் சென்றார். இதன் பின் ஸர் ஜான் லாரென்ஸ் என்பவர் ஸிம்லாவை கோடைகாலத்து ராஜதானியாக நியமனம் செய்தார். அதிகாரி மெச்சியது ரம்பையாய், பிறகு அதற்கு உயர்வும் ஏற்பட்டுக் கட்டிடங்களும் அங்கு தோன்றின. ஜூன் ஜூலை மாதங்களில் இங்கு பனியால் மூடப்பட்டு வெகு சீதளமாயிருக்கும். ஸிம்லாவிலிருந்து பார்த்தால் பக்கத்திலுள்ள பர்வதங்கள் வெகு ரமணீயமாய்க் காணப்படும்.

***

"ஸீக்"—என்னும் பதம் "சிஷ்யன்" என்னும் பதத்திலிருந்து தோன்றியதாகும். ஸீக்கியர்கள் குருவினிடம் மிகுந்த பக்தியுள்ளவர்கள். ஸீக் மதஸ்தாபகரான நானகன் 1469-ம் ஆண்டில் லாகூருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். கபீர் என்னும் ஹிந்துமத உபதேசகருடைய எண்ணமே நானகனுடைய பிரஸங்கத்துக்கு ஆதாரமாயிருக்கிறது. இவர் ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஏக தேவதாராதனையைப் போதனை செய்து உபயத்திரர்களுக்கும் கூட்டுறவை ஏற்படுத்தப் பிரயத்னம் செய்தார். ஆனால் நானகன் ஸ்தாபித்த மதம் ஒரு கடவுள் உண்டென்று சொல்லவில்லை. ஸமஸ்தமும் தெய்வமே என்ற அத்வைத மார்க்கத்தைத் தெரிவிக்கின்றது. ஹரி நாமஸ்மரணை செய்தால் ரக்ஷிப்புண்டென்பது இவ்வருடைய கொள்கை. தன் மதத்தைப் பரவச் செய்வதற்காக நாநா தேச ஸஞ்சாரமும் செய்ததாகத் தெரிகிறது. இவர் ஆகாச மார்க்கத்தில் பறக்கவும், தாம் இருக்குமிடத்திற்கே வேண்டிய பொருளைத் தருவிக்கவும் சக்தி பெற்றிருந்தாராம். மக்காவுக்கும் சென்றிருந்தாராம். அங்கு கால் நீட்டிப் படுத்திருக்கையில், ஸ்வாமிக்கு எதிரில் காலை நீட்டியதாய்க் குற்றம் கூற, அதற்கு எந்தப் பக்கம் படுத்தாலும் கடவுள் இருக்கிறாரே யென்று பதில் சொன்னாராம். 70-வது வயதில் 1539-வது ஆண்டில் இவர் கடவுளின் திருவடி நீழல் எய்தினார்.

***

ஸீக் ஜனங்களின் பத்தாவது குருவான கோவிந்தன் தன் சிஷ்ய வர்க்கத்தார் யுத்த வீரர்களா யிருக்க வேண்டு மென்று பெயர்களின் கடைசியில் 'ஸிங்' (ஸிம்ஹம்) என்ற பதத்தைச் சேர்த்துக் கொள்ளச் சொன்னார். கேசம் நீண்டதாயும், சிறிய கால் செராக்காயும், கையில் கத்தியும் எல்லாரும் அநுஷ்டித்து வைத்துக் கொள்ளும்படி கட்டளை யிட்டார். குரு கோவிந்தன் ஜீவித காலமெல்லாம் யுத்தத்திலேயே ஆசை கொண்டிருந்தார். பாட்னாவில் இவருடைய கோயில் உண்டு. தனக்குப் பிறகு குருவாக எவரையும் நியமனம் செய்யாமல்—"கிரந்தமே உங்களுக்குக் குரு வென்று நம்புங்கள்; நீங்கள் அறிய ஆசைப்படும் விஷயங்களெல்லாம் கிரந்தம் தெரிவிக்கும்" என்றும் அனுக்கிரகம் செய்தார். ஸீக் ஜாதியார் விக்கிரகாராதனை செய்வதில்லை யாயினும், அவர்களின் மதகிரந்தத்தையே தெய்வமாகப் பாவித்து அதற்கு வஸ்திரம் பூஷணாதிகளால் அலங்காரம் செய்கின்றனர். இவர்கள் மத்யபானம் செய்வர். ஆனால் புகையிலை போட்டால் பூர்வ புண்யங்கள் போய் விடு மென்பர். இவர்களில் அகாலிகள் என்று ஒரு வகுப்பாருண்டு. நினைத்த போதெல்லாம் ஸ்வாமியைப் பூஜிப்பது இவர்களின் வழக்கம். இவர்களின் தலைக்குட்டையில் ஒருவித சக்கரமுண்டு. இவர்களின் தொகை 18-லக்ஷம். தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு.

நம்மைக் கோபிப்பவரிடம் நாம் சாந்தம் பாராட்டவேண்டும். கோபத்துக்குக் கோபத்தையே திருப்பிக்கொடுப்பது அதை விருத்திசெய்யுமேயன்றி தணிக்காது. எப்படி நெருப்பு நீர் அவிக்குமோ அதுபோல் கோபத்தைச் சாந்தகுணம் சமனமாக்கிவிடும். இதனாலேதான் வெறுத்தவரிடம் கூட அன்பு பாராட்டுவது மனசாந்திக்கு அனுகூலமென்கிறோம். ஹிதவார்த்தைகளை அநுஷ்டியாதவரை அவை வாஸனையற்ற புஷ்பங்களுக்குச் சமானமாகும். புஷ்பமானது எத்தனை அழகாய்த்தோன்றினாலும் வாஸனை இல்லாவிட்டால் எப்படிப் பிரயோஜனப்படாதோ அப்படியே நல் வசனங்கள் பிறரால் அநுஷ்டிக்கப்படாவிட்டால் நிஷ்பிரயோஜனமென்றே சொல்லலாம்.

புத்திமான்கள் ஏகாந்தத்திலிருக்க விரும்புவார்கள். வம்பர்கள் மனிதர்களைச் சண்டைக்கு இழுப்பதில் நிபுணர்கள். இவர்களின் மண்டைத் தண்ணீர் நாற்றமெடுத்துப்போனதால், புத்தியே இல்லாமற்போகிறது. நிஷ்காரணமாய் எதற்கும் சண்டைபோடுவார்கள். அவிவேகிகள் அண்டை அயல் வாழ மனம் ஸகியார். அண்ணன் தம்பி ஏழை தனிகர்களா யிருந்தால் அதைக்கண்டு பொறாமைப்படும் மூடர்கள் பூமியில் ஏராளமாயுளர். கிராம வாசிகளில் சிலர் பொழுது விடிந்தால் ஒவ்வொரு வீட்டாரின் சங்கதிகளையும் விசாரித்து வலுவில் தங்கள் அபிப்பிராயங்களை எடுத்தோத வருவார்கள். அநேகருக்குக் கல்வியறிவே கிடையாது. தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று வாதிக்கும் புத்தி சூன்யர்கள் நாகரீககாலத்திலும் இருக்கின்றனர். ஒருவரோடொருவர் ஸ்நேகபாவமில்லாமல் தனித்தனியாய் காரியங்களைச்செய்து பலனடையாமற்போவதே நம்மவரில் அதிகம். விவேகிகளின் லக்ஷணம் மௌனமாய் எவருடனும் கலகம் செய்யாமல் அனைவருக்கும் பிரீதிகரமாய் நடக்கப் பார்ப்பதாகும்.

கவிதா விலாஸம்

கலைமகள் தோத்திரப் பஞ்சகம்

திங்கட் டிருமுகத்துச் சேயிழை யேநான்
அங்கம் புண்ணாக அகமிக நொந்தேன்
எங்கும் புகழ்பெற் றின்புடன் வாழ
சங்கத் தமிழ்மூன் றும்தந்தருள் வாயே !

பாவலரும் நாவலரும் பணிசெய்ய நான்முகனார்
நாவமரும் அருங்கலையின் னாயகியே பாரதியே !
காவலரும் நாவலருங் கருத்துற்றுச் சேவைசெய
ஆவலுட னென்னை யாதரிக்க வேண்டுவனே

பண்டித னென்றென்னைப் பலருங் கருத்திலிட
அண்டிநல் லருள்புரிவாய் அம்மையே கலைவாணி
தண்டிரை நீர் சூழுலகில் தாயே நினையல்லால்
கண்டிலேன் வேறோர்க் கதி, யருளிக் காப்பாயே !

எப்போதும் நின்னருளை நோக்கியே யேங்குகின்றேன்
தப்பேது நான்செயினும் தயைசெய் தருள் புரிய
இப்போதே ஒல்லையில்வந் தென்னுள்ளம் வீற்றிருப்பாய்
செப்பாத திருமேனி திகழ்ந்தோங்குங் கலைமகளே !

முத்துவடம் பூணும் முதல்வீ வெண் டாமரையாய்
நித்தமுன்னை நியமமுடனேத்து கின்றேன்
எத்தகையோரும் போற்றும் எழிலார் தமிழ் நலத்தை
இத்ததி வந்தெனக்கிங் கின்பமுற ஊட்டுகவே !

உபாத்தியாயர்—ஸ்ரீ. கிருஷ்ணசாமி நாயுடு.

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்	# விகடப் பிரதாபன் (Registered.)	அநுபவம். அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

எந்தப் பிழைப்பு தான் ஏற்றதுவோ?

II.

பழய சாதத்திற்குச் சட்டியில் சுண்டிக் கிடப்பதைத் தொட்டுக் கொள்வது போல், முந்திப் பாதியில் விட்டுச்சென்ற என் விகடக் கலைஞானததை எட்டிப் பிடித்துக் கொண்டு வரிசை வரிசையாய் வட்டிக்கிறேன்; என் விகடக் கண்மணிகளே கேட்கிறீர்களா! முந்திய மாதத்தில் கவி பாடிப் பிழைக்கும் தொழிலைக் கடைசியில் குறிப்பிட்டே னல்லவா? காரிகை யடித்துக் கவி பாடுவதிலும் பேரிகை யடித்துப் பிழைப்பது நன்றே என்று கம்பன், காளமேகம், காளிதாஸன், சத்தி முத்தப்புலவர், படிக்காசன், தண்டி, பவபூதி, பாணன், ஷேக்ஸ்பியர், கோல்ட்ஸ்மிமித், மில்டன், ஜான்ஸன் முதலிய மகா மகா வித்வான்கள் ஒவ்வொரு காலத்தில் பட்ட பாட்டை நினைத்தால் வெட்க்கேடும் சக்கிலியக் கூத்துமாய் பயமாக இருக்கிறதோடு, இந்தக் காலத்திலும் நொள்ளைக் கண்ணனை செந்தாமரைக் கண்ணனென்றும், பார்க்கச் சகியாத குரூபியை மன்மத ஸ்வரூபி யென்றும் நேர் விரோதமாய் ஸ்துதி, கவிகள் பாடாவிட்டால் பிழைப்புக்கு இடமில்லை. பிரஸித்தி பெற்ற கவிராயர் என்று சொல்லுவோரின் பிழைப்புகளை யெல்லாம் கவனிக்கையில், இன்று சீனிச் சர்க்கரையில் காபி வைப்பதும், நாளை உப்பிலாக் கூழை குடித்துத் தலைப்பாகை தரித்து வெளி வருவதுமாய் கை மூடிய ஜீவியமாகவே இருக்கிறது.

இது உதவாதென்று புஸ்தகம் போடும் தொழிலை வைத்துக் கொள்ளலாமென்று யோசித்தால் அதிலும் பாடான பாடு இருக்கிறது. நாமே புஸ்தகத்தைச் சொந்தமாய் அச்சிட்டு விற்பனை செய்வோ மென்றால், பணத்தைக் காசாக நினைத்துக் கொட்டவேண்டி யிருக்கிறது. அச்சிட்ட பின்பு விற்கப் போனாலோ, விற்றுக் கொடுப்பதாகச் சொல்லும் புஸ்தக வியாபாரிகளில் பத்துக்கு ஒன்பது பேர் வந்ததை

வாங்கிக் கொண்டு பிறகு ஏமாற்றும் பக்கா புள்ளிகளாவே இருப்பதில் பெரிய நஷ்டமுண்டாகிறது. விளம்பரம் செய்தே விற்பனையாக்க வேண்டி யிருப்பதில், அதிலும் உதவாத புஸ்தகங்களின் விளம்பரங்கள் சூழ்ந்து கொள்ள நல்ல வஸ்துவின் அருமை தெரியாமல் விற்பனையும் அவ்வளவாகக் காணும். அதிர்ஷ்டமும் பிரசித்தியு முள்ளவர்களுக்கே அது கைகூடி வருகிறது. முடவன் கொம்புத்தேனுக்கு முட்டிக் கொள்வதுபோல் கிரந்தகர்த்தாக்களெனப் பேர் வாங்கவும், துட்டு சம்பாதிக்கவும், முகவுரையும் விளம்பரமும் இதரானிடம் எழுதிப் பத்திரிகைகளில் பிரசுரஞ் செய்வதும் அதிகமாய் விட்டதால், கருத்ததெல்லாம் தண்ணீர் — வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் உள் மர்மமறியாத ஜனங்கள் வாங்கி ஏமாறுவதில் இந்தத் தொழிலுக்கும் தோஷம் முற்றி யிருக்கிறது. புஸ்தகம் எழுதிப் பிறருக்கு விற்றுவிடுவோமென்றாலோ, பஞ்சத்திற்குப் பிள்ளை விற்கப்போன பாடாய் முடிவதில் அதிலும் சுகமில்லை. பிரசுரகர்த்தர்கள் (Publishers) என்போரில் வெகு பேர் குள்ள நரியினும் அதிக தந்திரம் படித்தவர்கள். இவர்களை நம்பி லாபம் கண்ட நூலாசிரியர்கள் மிக மிகக் கொஞ்சமே.

எனவே, இதையும் ஒரு புறம் ஒதுக்கி, பத்திராசிரியராயிருந்து ஜீவனம் செய்யலா மென்றால், தானே பத்திரிகை நடத்த முயலுவதில் பாடானபாடு இருக்கிறது. திரும்பி வரும் வி.பி.களை யெல்லாம் பார்த்துச் சகிக்கவேண்டி யிருக்கிறது. எவ்வளவு பணம் வந்தாலும் அவ்வளவும் பத்திரிகைக்கே செலவாகிக் கண்விழி பிதுங்குகிறது. அதிர்ஷ்டசாலிகளான சிலருக்கு இது கைகூடி வந்தாலும் வெகு பேருக்கு இது நஷ்டமும் கஷ்டமுமே தருகிறது. இனிப் பிறரிடம் பத்திராசிரியர்களாய் இருப்போ மென்றால், இதில் சிலர் பத்திராசிரியர்களின் பெயரை வெளியில் வரவொட்டாமல் தாங்களே பத்திராதிபர் என்று தங்கள் பெயரைப் போட்டுக் கொள்வதால், எவ்வளவோ உழைத்தும் வெளியில் பேர்—பிரசித்தி இல்லாமல் போகின்றது. பின்னும் அவ்வப் பத்திராதிபர்களின் நோக்க மறிந்து எழுதவும் வேண்டி யிருக்கிறது.

இதையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கைத்தொழில் செய்து பிழைக்கலா மென்றால், கடியார வேலை செய்வோரின் விளம்பரப் பலகையைப் பார்த்து மயங்கிக் கடியாரத்தைப் பழுது பார்க்கத் தருவதில் கோழியும் முட்டையுமாகச் சேர்த்து விழுங்கி விடுவோரின் சங்கதிகள் அதிகமா யிருக்கிறதென்றும், தட்டாரவேலை தாய்ப் பொன்னிலும் மாப் பொன் எடுக்கும் வேலையாய், பிறர் முன்னிலையில் தன்னை வெகு சந்தேகமும் பார்வையுமாக நிற்க வைப்பதாய், தட்டான் கடைக்குப் போனால் தானே கெடுவு வைத்துக் கொண்டு வரவேண்டிய தென்றும்—இப்படியே ஒவ்வொரு கைத்தொழில்காரர்களுக்கும் குண தோஷங்கள் ஏற்பட்டிருப்பதால் இவைகளையும் நீக்க வேண்டி யிருக்கிறது. மேலும் இது சரீர உழைப்பு வேலை யாதலால் பேனு பிடிக்க விரும்புவோர் இதை நாடுவதே யில்லை.

இதையும் விட்டு, விற்பவர்களிடம் மொத்தமாய் வாங்கி, அதை வெளியூரில் வேண்டுமென்பாருக்கு அனுப்பும் கமிஷன் ஏஜண்டா யிருப்போ மென்றால், இந்த வேலையின் கௌரவத்தையும குறைவு படுத்த, கழுதை கெட்டால் குட்டிச்

சுவரென்று வேலையற்ற தாசிரிகளும், அற்ப சொற்பப் படிப்புப் புள்ளிகளும் இதில் கை நனைத்துக் கொண்டு, பத்திரிகைகளின் விலாசங்களை பணத்துக்குச் சம்பாதித்துக் கேட்லாக்குகளைப் பிரமாதமாய் அச்சிட்டுக் கொண்டு எல்லா விலாசங்களுக்கும் அனுப்பி, சமுத்திரத்தில் மூன்றாவது அலையில் தங்களுடைய மகா கம்பெனி யென்றும், ஆற்றில் அறுபது காணியில் ஆலை வைத்து வேலை நடக்கிறதென்றும், சுடுகாட்டில் தினந்தோறும் தீமூட்டி உருக்கு வேலைகள் தீருகிறதென்றும் விளம்பரப்படுத்தி மகா அநியாய அக்கிரம மோசங்கள் செய்வதால் இந்த ஹீனமான ஜோலியும் உதவாதென்று விலக்கவேண்டி யிருக்கிறது.

எல்லாம் ஒதுக்கி, வர்த்தகம் செய்யலா மென்றாலோ, ஒவ்வொரு வர்த்தகமும் ஒவ்வொரு ரகசியத்தைத் தன்னுள் கொண்டிருப்பதால், அந்தந்த இடத்தில் வேலைக்கு அமர்ந்து கற்று அநுபவம் பழுத்தே எதுவும் ஆரம்பிக்க வேண்டி யிருப்பதில் அதுவும் சுலப சங்கதியாக இல்லை. முதலில் திராச பிடிப்பதிலும், பொட்டணங்கள் கட்டுவதிலும் கூடப் பல போதனைகள் அடங்கி யிருக்கின்றன. எந்தச் சிறு அற்பமும் வர்த்தக சாலைகளில் பழகியே வரவேண்டு மன்றி புஸ்தகங்களைப் படித்து அறிவதல்ல. ஒரு மண்டி மளிகைக் கடைக்கு எவ்வளவோ சங்கதிகள், கை சாமர்த்தியங்கள், கை யளவுகள் இன்னும் எத்தனையோ தெரியவேண்டி யிருக்கின்றன. இவ்விதமே ஒவ்வொன்றிலும் பல சூட்சுமங்கள் நிறைந்துள்ளன. மேலும் பெரிய பெரிய முதல் வைத்தும் செய்யவேண்டி யிருக்கிறது.

எனவே, இதையும் விட்டு, வைத்தியம் செய்யலாமென்றால், சுக்கு வாய்வுக்கு, கரி வேப்பிலை பித்த சாந்திக்கு, வீரம் ஜன்னிக்கு, நெய் சூட்டுக்கு — என்று தெரிந்ததிலேயே, யானைக்கு அர்ரம், மாட்டுக்கு மர்ரம், குதிரைக்குக் குர்ரம் என்று வெகு சுலபத்தில் தெலுங்கு பாஷை முழுதும் தெரிந்துவிட்ட தமிழன்போல், வைத்தியர்களென வெளிக் கிளம்பி பிணியாளர்களை அதி துரிதமாக வைகுண்டம் காணச் செய்வதால், இதில் ஏற்படும் பொல்லாத திட்டுகளைக் கவனிக்கையில் இந்த வேலை முக்காலும் உதவாது. மேலும் வைத்தியமென்பது ஒரு வைத்தியனிடம் ஊழியம் செய்தே கற்றுத் தேற வேண்டிய மகா விஷயம். உலக சாஸ்திரங்கள், பாகங்கள், செய் வகைகள் யாவும் வைத்தியத்துக்குள் அடக்கமாகி விடுகிறது. இதை எளிதில் கற்பதும் அரிது. சொல்லிக் கொடுப்பவர்களோ இன்னும் அரிது.

இதையும் தள்ளி, சாமி, சந்யாசி, குரு, யோகியாக ஆகி விடலாமென்றாலோ, இந்த வேஷத்தைக் காப்பாற்ற எண்ணற்ற கஷ்டங்கள் இருப்பதாலும், விசேஷமாகப் பெண்ணாசையை ஜெயிப்பதென்பது மகா பொல்லாத சோதனையில் வந்து முடிவதாலும், இது நாமே செய்து கொள்ளாமல், நமது சித்த பக்குவத்தில், பூர்வம் பழுத்து நிற்பதிலிருந்தே கை மேல் கனியாய் நமக்கு எட்ட வேண்டிய வரசித்தியாக இருப்பதாலும் இதிலும் சுகம் ஏதும் காண முடியவில்லை. மேலும், உண்மை சந்நியாசி ஒருவனுயின் கபட சந்நியாசிகள் தொகை பல்லாயிரத்துக்கும் எட்டிவிடுவதால் இங்கும் கௌரவம் காணோம்.

இனி காங்கிரஸ் மகா சபை போன்றதில் சேர்ந்து கொண்டு தேசாபிமானம் காட்டி அதில் வயிற்றுப்பாட்டைப் பார்ப்போமென்றால், அது பழய நாள் மாதிரியில் அக்கிரா

ஸனம் வகித்தோரெல்லாம் ஐகோர்ட் ஜட்ஜிகளும் அது இதுகளும் ஆன படியா யில்லாமல், இந்த நாளில் சிறைக்கும், பழிப்புக்கும், பல துன் பங்கட்கும் ஆளாக வேண்டிய சங் கதியா யிருக்கிறது. மேலும் பெரிய தலைகளுக்குத்தான் இதில் நல்ல நல்ல கிச்சடியும் பச்சடியுமானதால், சாதாரணஸ்தர்களுக்கு இதில் கந் தாயமில்லை, லாபமுமில்லை. பிறந்த நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்று நற்சிந்தையுள்ளோருக்கு இது இட மாகலாமன்றி, வயிற்றுப்பாடு சங்கதி யுள்ள சாதாரணஸ்தர்களுக்கு அவர் கள் தலைவர்களை எதிர்பார்த்தே மாங் காய் கடிக்க வேண்டியிருக்கின்றது.

இதையும் விட்டு, முனிசிபல் கௌன்ஸிலர், போர்ட் மெம்பர், சேர்மன், ஹானரரி மாஜிஸ்திரேட் முதலிய வேலைகளைப் பார்ப்போ மென்றாலோ—அது பணம் பெருத்த பெரிய மண்டைகள் தங்கள் கௌர வத்துக்குச்செய்து இன்சால்வெண்ட் மனு கொடுக்கும் காரியங்களாத லின், வயிற்றுப்பசிக்காரனுக்கு இந்த வேலைகள் கட்டிவராது. இருக்கிற சொத்துக்களுக்கு நாசத்தைத் தரும் வேலைகளாதலால் ஏழைக்கு இங்கு எந்த வேலையு மில்லை.

இப்படியாக, விகடனுடைய ஆராய்ச்சியிலே எந்த வேலையும் தொந்தரைக்குள்ளாகத்தான் இருக் கின்றது. அறக்கப் பரக்கப் பாடு பட்டும் படுக்கப் பாயில்லை; குதித் துக் குதித்து மாவு இடித்தும் குண் டிக்கு வழியில்லை; ஓடியோடி யுழைத் தும் உடுக்க உடையில்லை என்று என்ன வேலை செய்தும் ஈடேற வழி யில்லாது உள்ளுக்குள்ளாகவே போகிறதாயிருக்கிறது. எந்த வேலை தான் உலகில் குற்றம் கூறப்படாத தாய்ச் சிறந்ததெனக் கண்டு பிடிப் பது? ஈர வெங்காயத்துக்குள் ஏதோ இருக்கிறதென்று புரை புரையாய் உரித்தும் ஒன்று மில்லையென்று கடைசியாக விகடன் முடிவுக்கு வந் தது யாதெனில்,—ஜோதிஷ சாஸ் திரத்தில் சொல்லும் 12-லக்கினங் களும், 9-கிரகங்களும், 27-நக்ஷத் திரங்களும், எப்படித் தனித் தனி சுபம்—அசுபம் என்று கூறுதற் கில்லாது,—சேர்க்கை தோஷங் களால் —வித்தியாஸப்படுகின்றன வோ அதுபோல்,—உலகில் ஒவ் வொரு வேலையும் ஏற்ற இறக்க மில்லாமல் சம அந்தஸ்துள்ள வைகளாகவே இருக்கின்றனவென் றும், அதனைச் செய்வோரின் குண வேறு பாட்டாலேயே கஷ் டங்களுக்கும் போல்லாத பெயர் களுக்கும் இடம் தருகின்றனவென் றும் தீர்மானிக்க வேண்டியதாகிற தென்பதுதான். ஆகவே, ஊர் இருக்கிற நிலைமையைப் பார்த்துக் கொண்டு, எந்தப் பிழைப்பு தான் ஏற்றதுவோ என்று அலசிக்கொண் டே ஒவ்வொன்றுக்கும் குற்றம் சொல்லிக்கொண்டு வீட்டில் குந்தித் தின்று கொண்டு போகப் பாராமல் வெளியில் திரிந்து ஏதாவதொன் றைத் தொட்டுக்கொண்டு, அது கை விட்டுப் போகும் சமயத்தில் உதவும் படி மற்றொன்றும் கற்றுக்கொண்டு வியர்வை வடிய உழைத்து உப்பு மிளகாய் தொட்டுக்கொண்டாலு லும் தன் சோறு உண்டு, தன் பாயில் படுத்து தனி ராஜாங்கமாய் வாழும்படி என் குஞ்சான்களுக்கு விகடன் என் ஞானத்தடியால் தட விக் கொடுத்துச் சொல்லுகிறேன். சோம்பேரியினுடைய நெய் சோற் றைவிட, உழைத்துண்பவனின் உப் பிட்ட கஞ்சி மகா மேலானதென் றும் கூறுகிறேன். பிறகு உங்கள் பாடு! ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!

மதிப்புரை.

விதவா விவாக விளக்கம்:— [ஸ்ரீ C. P. இராஜகோபால் நாயுடு அவர்கள் இயற்றியது. விலை அணா 8. திரிச்சி சவுந்தரப்பாண்டியன் பிள்ளை தெருவில் ஷையாரிடம் கிடைக்கும்.]

கன்னிகா விதந்துவிசாரம் மிக மிகப் பெரியதே. அவர்களுக்கு மறு விவாகம் செய்விக்க சாஸ்திராதார முண்டென்று இந்நூலில் இதன் ஆசிரியர் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நூலின் கருத்துகள் நன்றாகவே இருக்கின்றன. ஆயினும் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வருவதற்கு அதிகாரு நீந்தும் வல்லவர்கள் வேண்டும். இதன் ஆக்கியோனைப்போலவே, 1871-ம் வருஷத்தில் சைதாபுரம் ஸ்ரீமான் காசி விஸ்வநாத முதலியார், இது போன்றதொரு நூலை வெளியிட்டார். ஆயினும் பயன் நல்கவில்லை. விதவாவிவாகம் செய்விக்கச் சட்டமும் இருக்கிறது. இருந்தும், காரியத்தில் கனிந்து வந்தவை எங்கோ ஒன்றிரண்டுதான். இதன் ஆசிரியர் திருச்சியில் விதவா விவாக சபையொன்றும் ஸ்தாபித்திருக்கிறார். லக்ஷ்யங்கள் மிகவும் உத்தமமானவைகள்தாம். ஆனால் இதில் சம்பந்தப்பட்டு விவாகத்துக்குத் துணிந்தவர்களைப் பந்துஜன ஸமூகம் வெகுபாடு படுத்தி விடுகிறது. வாய் ஞானம் வேண்டியவரை பேசலாம். நூல்களும் எழுதி விடலாம். சட்டமும் இயற்றிவிடலாம். ஆனால் பந்துஜன ஸமூகத்தை எதிர்த்துக் கொண்டு செய்ய சக்தியற்ற நிலையில் என்ன செய்யலாம் என்பவர்களின் எண்ணிக்கையே அதிகம். ஈசன் தான் துணை.

***

மாயா விநோதப் பரதேசி:— [ஸ்ரீமான் வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் அவர்கள் இயற்றியது. இரண்டு பாகங்களின் விலை ரூ. 5. K. விஜயம் கம்பனி, ராயப்பேட்டை, சென்னையில் கிடைக்கும்.]

856-பக்கங்களில் பூர்த்தி பெறும் இந்த நாவல் படிக்கப்படிக்கப் பரவசமளிக்கும் நடையில் மிக்க விசால ஹிருதயமாகச் சென்று கதையை வெகு ருசிகரமான அமைப்பில் ஸம்பூர்ணப்படுத்துகின்றது. கதாநாயகனின் பெண்வேட விபரீதம் பல திடுக்கிடும் சம்பவங்களை யுண்டு பண்ணி விடுவதாகக் காட்டிச் சென்றுள்ள கற்பனை மிகு விநோதகரமானது. கதாநாயகியின் மேற்றிசை ஞான நவ நாகரீகங்களையும், பிறகு அவை தவிடுபொடி யாதலையும் பெண்மக்கள் வாசித்து அறிவு பெற வேண்டியவைதாம். திகம்பர சாமியாரின் துப்பறியும் சூழ்ச்சிகளும், பாம்புக்கடி போன்ற பாகங்களும், மாசிலாமணியின் கெடுபுத்தி அவனுக்கே தீயதாக முடியும் பான்மைகளும், சோபனப் பெண் முதலிய சிருங்கார பாகங்களும், ராமாமணியைச் சிக்க வைக்கும் நீலலோசனியின் காரியங்களும், வக்கீல் சட்டநாதப் பிள்ளையின் சாமர்த்தியங்களும் வாசித்தறிந்தே ருசிக்க வேண்டும். இது நாவலாக மட்டு மில்லை. அநேக அரிய போதனைகளும் அநுபவங்களும் உலக நீதிகளும் அடங்கிய விஸ்தாரமான கிரந்தமாகவும் இருக்கின்றது. அவ்விதம் வரைவதை ஆசிரியர் தமது வழக்கமாகக் கொண்டிருக்கிறார். ஆசிரியர் வெகு காலம் வாழ்ந்திருந்து தமது உத்தம கைங்கரியத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு செல்லுமாறு பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரிகா சாரம்

தேன் :—

"மாமிஸ சத்துக்களையும் கோழி முட்டைகளையும்விட தேனில் அதிக நம்பிக்கை வையுங்கள்" என்று பல மேஞ்ட்டு வைத்தியர்கள் அபிப்பிராயம் கொடுத்திருக்கிறார்கள்.

(ஆரோக்கிய தீபிகை)

சபைப் பழக்கம் :—

முக்கியமாகப் பயிலவேண்டியது சபைப் பழக்கமே. அஃதென்னையெனிலோ, பலர் கூடிய ஒரு சபையிலே சென்றால் அங்கே நிகழுவனவற்றையெல்லாம் சாவதானத்தோடு மவதானித்தல், அநாவசியமாக நகையாதிருத்தல், பெரியோர், வயதின் முதிர்ந்தோர் வரின் எழுந்து தம் ஆசனத்து அவரையமர்த்தித் தான் வேறிடந்தேடியிருத்தல், விஷயத்தின் முதலிலோ, இடையிலோ, கடையிலோ விட்டகலாது அது முற்றுப்பெறும் வரையும் அமைதியாயிருந்து கேட்டல், வீண் வார்த்தையாடாதிருத்தல் முதலானவைகளாம்.

(இந்து சாதனம்)

தமிழ் மொழி படும்பாடு :—

ஐயோ, அருந்தமிழே, செந்தமிழே, மூவேந்தரால் முச்சங்கத்தில் வளர்க்கப்பட்ட தமிழே; இப்பொழுது உன் பிள்ளைகளாற் கைவிடப்பட்ட தமிழே; நூலிழந்ததமிழே; இப்பொழுது உன்னைப் பரிபாலிப்போர் காலத்தில் நீ இன்னமும் என்னென்ன அவமானங்கட்கு ஆளாகப் போகின்றனையோ யாமறியோம்! இக்காலத்தில் உன்னைத் தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் வார்த்து வளர்க்க முயலுகின்றார்கள்.

(இந்து சாதனம்)

பள்ளிக்கூட ஞாபகம் :—

மேல் நாடுகளில் ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேறி நல்ல நிலைமையிலிருக்கும் ஒவ்வொருவரும் தமது ஞாபகமிருக்கும்படியாக ஏதாவது ஒருவிதத்தில் அப்பள்ளிக்கூடத்தில் சம்பந்தப்பட்டிருப்பார்களாம். அதனால் அப்பள்ளிக்கூடங்கள் பொருளால் முட்டுப்பாடின்றி நன்கு நடைபெற்று வருகின்றவாம். இம்முறை நமது தேசத்திலும் நடைபெறுமாயின் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பட்டுள்ள பொருள் முட்டுப்பாடு சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிடாதா?

(யதார்த்தவசனி)

வீண் மனக் கோட்டை

மற்றவர்கள் சீக்கிரம் கண்மூடிக்கொள்ளக்கூடும்; தான்மட்டும் நெடுநாள் மனைவி மக்களோடு வாழ்ந்து ஆஸ்திசேர்த்து வைக்கக் கூடும் என்று எண்ணுகிற பொட்டைக் கண்ணன் தான் சீக்கிரம் முடிந்து போய்விடுகிறான். அவன் நினைத்ததெல்லாம் வீண் மனக் கோட்டையாகி விடுகிறது.

சென்ற மாதம்

பரஸ்பர நிந்தனை

காங்கிரஸ் மகாசபை பிராமணர்களுடைய சபையே யாகுமென்று பெரிய பழிப்புச்சொல்தோன்றியுளது. இனி பிராமணர்களைக் கொண்டு, சுபாசுபங்களைச் செய்விப்பதில்லை யென்று கட்டுப்பாடு கொண்டு ஒரு சாரார் தோன்றியிருக்கின்றனர். இந்தப் பரஸ்பர நிந்தனைகள் படித்தவகுப்பாருக்குள் நடைபெற்று வருகின்றன. எந்தப் பத்திரிகையிலும் இந்தப் பிரஸ்தாபனையே அதிகம். தேர்தலின் பிரசாரங்களும் அதன் ஆரவாரங்களும் ரதோத்ஸவத்தினும் பெரிது! கடைசியில் இது என்ன விதமான முடிவுக்குப் போகுமோ!

***

சட்ட மறுப்பு

ஸ்ரீ பண்டித மாளவியா கல்கத்தாவுக்கு வரக்கூடாதென்ற உத்திரவை மீறி நடந்து வெற்றி பெற்றிவிட்ட லாட்டரிச் சீட்டின் அதிர்ஷ்டம் எல்லோருக்கும் கிடைப்பது கஷ்டம். ஸ்ரீ மாளவியா பெரிய மிதவாதி. அத்தகையோரையும் சட்டம் தூரத்திக் கொண்டு செல்வதுதான் ஆச்சரியம்!

***

இலங்கையில் இந்திய வேலையாளர்

இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கூலி ஜனங்களாகச் சென்றிருப்போரின் தொகை ஆறு லக்ஷத்துக்கும் அதிகம் இருக்குமாம். இவர்களுக்கு 8 அல்லது 9 அணா தான் நாட்கூலியாம். அந்தக் கூலி நமது பக்கத்தில் கிடைக்காதா? ஏமாற்றப்பட்டே வெகுபேர் கூலிகளாகச் செல்லுகிறார்களன்றி உண்மை தெரிந்துசெல்வோர் மிக அரிது. இதைக் கவனித்து நிறுத்தும் பிரசாரத்தைத் தொடங்கத் தலைவர்கள் முன் வராததென்னவோ?

***

நாம் ஏமாற்றப் படுதல்

நமது வீட்டுப் பாத்திரங்களைத் தேய்ப்பதற்கு 'பிராஸ்ஸோ' என்ற வஸ்து உபயோக முள்ளதாம். இதைப்பற்றிப் பத்திரிகையில் ஒரு விளம்பரம் காணப்படுகிறது. இதைப் பார்த்து நாம் ஏமாறக்கூடாது. நமது சுலப சாதனங்களான புளி, சாம்பல் முதலியவற்றைக் கொண்டு பாத்திரங்களைச் சுத்தி செய்யும் முறைக்கும் மேலான முறையில்லை. இவ்விதமே நமது வீட்டு நெய்க்குச் சமமாக எந்தப் போலி நெய்யையும் ஒப்பிட முடியாது. தாய்ப்பாலின் குணம் எந்த டப்பிப் பாலுக்கும் வராது. நமது பற்பொடியைவிட வெளிநாட்டுப் பற்பொடி உயர்ந்ததல்ல. மரக்கிளைகளில் அவ்வப்போது புதிதாய் ஒடித்துக்கொண்டு பல் தேய்க்கும் குச்சிகளுக்கு முன்பு மேனாட்டுப் பல் புருஸ்கள் பயனற்றதாகும்.

காலம் கழிப்பது பெரிதல்ல. காலத்தைக் கழிப்பதால் ஒரு வித நன்மையை யடையவேண்டும். மனதுக்குக் குற்றமற்ற இன்பமும் புத்தி விருத்தியும் உண்டாகும்படி காலம் கழிப்பதற்கு ஏற்ற உபாயம் நல்ல புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் படிப்பது தான்.

அரசியல் ஞானம்

நாகரீகம் விருத்தியாகி, மனிதனின் அறிவு விசாலப் படவும், அவன் ராஜீய விஷயங்களில் கவலை கொள்ளலானான். ஜனசமூகத்தை ஆண்டு, அதை மற்ற சமூகங்களினின்றும் காத்து ரக்ஷிக்க ஒரு அரசாங்க நிர்வாக சக்தி அவசியமாகும். பொதுவாக, இந்த சக்தி முதலில் ஒரு அரசனிடமே இருந்தது. பின்பு பிரபுக்கள் கைக்குமாறி, தற்காலத்தில் ஜன நாயக ஆட்சியே நியாயமான ஆட்சியென்று, யாவராலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. ஏனெனில், அரசியல் தத்வ நிபுணர்கள்—'கூடியமட்டும் ஆளும் சக்தியானது ஆளப்படுவோரின் கைக்குள்ளேயே இருக்க வேண்டும்—" என வற்புறுத்திக் கூறி யிருக்கின்றனர்.

***

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, ஜனசமூகங்கள் அளவிலும் தொகை யிலும் சிறியவை யாயிருந்ததால், ஜனநாயக ஆட்சி அப்பொழுது பரி பூரணமாக நடைபெற்றது. கிரீஸ் தேசத்தில் 'ஸிடி ஸ்டேட்ஸ்' (City States) எனப்படும் சிறு சமூகங்களில், ஜனங்கள் யாவரும் ஒரு சபையில் கூடி, தங்கள் தலைவனைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால், தற்காலத்தில் பெரிய ஜனத்திரளையுடைய பெரிய தேசங்களில், இம்மாதிரி அரசியல் நடப்பது கடினமானதால், ஜனங்கள் தங்கள் பிரதிநிதிகளின் மூலமாக அரசியலை நடத்திவருகின்றனர். பிரதிநிதி சபைகளில் அநேகம் 'கட்சி' கள் உண்டா கின்றன. இவைகளுள் எந்தக் கக்ஷியின் தொகை எண்ணிக்கையில் அதிக மாயுள்ளதோ அதுவே அரசியலை நடத்தவேண்டும். பிரதிநிதி அரசாங்கம், பல நன்மைகளுக்கும் இடம் தருகிறது. ஒருவன் கையிலேயே அரசியல் சக்தி யிருந்தால், ஜனங்களின் குறைகளை அவன் நன்கு அறிய முடியாது. பிரதிநிதிகளோ ஜனஙகளின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுவதால், ஜனங்களின் குறைகள் என்னவென்றும், எம்மாதிரியானவை என்றும் அவர்களே நன்கறிவர். மேலும் அடிக்கடி வரும் தேர்தல் (எலக்ஷன்) ஞாபகத்தினால், ஜனங்களைத் தங்களுக்குச் சாதகமாகச் செய்து கொள்ளும் பொருட்டு, அவர் பொது நன்மைக்குத் தீவிரமாக உழைப்பர். மூன்ாவ தாக, பிரதி நிதிகள் சபையினால் செய்யப்படும் சட்டங்களுக்கு ஜனங்கள், சந்தோஷகரமாகக் கீழ்ப்படிவார்கள். இதனால் 'ஜனநாயக ஆட்சியில்' சட்டங்கள் என்பவை தங்களுக்குத் தாங்களே நியமித்துக் கொண்ட கடமை கள் போலாகின்றது. கடைசியாக, அடிக்கடி நடக்கும் 'தேர்தல்' பிரசா ரத்தினால், ஜனங்களின் போது ராஜீய அறிவு வேகமாக விருத்தியா கிறது. ஏக மனிதன் ஆட்சியில் இந்நன்மைகள் பயக்க இடமில்லை.

***

கக்ஷிகள் மூலமாய் அரசியல் நடத்துவோர், சில சமயம் தீங்கிழைப்பது யாவராலும் அறியப்பட்ட விஷயம். மேலும் 'மைனாரிடி' என்று சொல்லப் படும் சிறு தொகையினர், அரசாங்கத்தில் சிறிதேனும் பங்கில்லாமல் போவது அநியாய மல்லவா? இந்தத் தீங்கைக் குறைக்கப் பல தேசங்களில்

பலவாறு முயன்று வருகின்றனர். சமூகவாரி பிரதிநிதித்துவம் அவைகளில் ஒன்றாகும். ஆனால், 'கக்ஷியரசு' பல விஷயங்களில் அரசாங்கத்தைச் சுளுவாகச் செல்லச் செய்கிறது. ஒரு சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும், அரசாங்க விஷயங்களில் கொஞ்சமாவது மாறுதலான அபிப்பிராயங்களையே கொண்டிருப்பான். இப்படி அபிப்பிராயம் கொண்டவர்கள், தங்களின் சிறு வித்தியாசங்களை விட்டொழித்து, ஒரு கக்ஷியில் சேரலாம்; அப்படிச் சேர்ந்ததும், தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்து நிர்வாக காரியங்களுக்கு நியமிப்பர். இரண்டாவது 'மைனாரிடி' என்ற சிறுபான்மைக் கக்ஷியினர் எப்பொழுதும் ஆளும் கக்ஷியை நிந்தித்துக் கொண்டே யிருப்பது சகஜமாயினும், கக்ஷியரசில் அநேகமாக அடுத்த தடவை அவர்கள் லகானைப் பிடிக்க நேரிடுமாதலால், அவர்களின் நிந்தனம் அநியாய மென்றாவது முன்யோசனை யற்ற தென்றாவது ஒருமிக்கச் சொல்லிவிட முடியாது.

***

ஒரு அரசாங்கத்தில் இரண்டே கக்ஷிகள் இருந்தால் மாத்திரமே, கக்ஷியரசு சுலபமாக நடைபெறும். ஆனால், அநேகமாக எல்லாத் தேசங்களிலும் இப்பொழுது இரண்டிற் கதிகமான கக்ஷிகள் கிளம்பிவிட்டன. இதனால் எதாவது ஒரு கக்ஷிமட்டும் பெரும்பான்மைப் பெருக்கின் வெற்றியை (மெஜாரிடியை) பெற முடிவதில்லை. ஆதலால் அரசியலை நடைபெறும்படி செய்ய, பல கக்ஷிகள் ஒன்றாய்க் கூட்டப்படவேண்டி யிருக்கின்றன. இது சாத்தியமாகும் பொருட்டுச் சில கக்ஷிகள் தங்கள் அபிப்பிராயங்களைச் சிறிதாவது விட்டுக் கொடுக்க நேருகிறது. இம்மாதிரி கூட்டப்பட்ட அரசும் சீக்கிரமே கவிழ்ந்து போகிறது. இதனால் தேசத்திற்கும் எவ்வளவோ தீங்குகள் உண்டு. இங்கிலாந்தில் கூட இப்பொழுது மூன்று கக்ஷிகள் இருக்கின்றன. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள சில தேசங்களில் ஏழு அல்லது எட்டுக் கக்ஷிகள் கூட இருக்கின்றன. (தொடரும்.)

R. இராமகிருஷ்ணன் பி. ஏ.

எந்தத் தேசத்தில் வித்தையும் நாகரீகமும் அதிகமாயிருக்கின்றனவோ அவ்விடத்தில் சிரேஷ்டமான பாஷா கிரந்தங்களும் கிடைக்கும். பூர்வத்தில் அநேக மகாகவிகள் காவ்ய நாடக அலங்காரம் முதலிய கிரந்தங்களை இயற்றி லோகோபகாரமான கீர்த்தியைப் பெற்றனர். இக்காலத்தவர்களைப்போலப் பொறுக்கு வித்வான்களாய் இருக்கவில்லை. எதையும் தமது சொந்த நுண்ணறிவின் துணைகொண்டு இயற்றினர். அதனால் தான் பழங்காலத்துப் புஸ்தகங்களுக்கு எப்போதும் மகிமை அதிகம். அவை செல்லரித்துப் போயிருப்பினும் வெகு பத்திரமாக வைத்துப் போற்றுவர். தற்காலத்து நூல்கள், கதைகள், நாவல்கள் இவற்றில் பெரும்பான்மை ஆங்கில மொழி பெயர்ப்புகளாகவே இருக்கின்றன. ஒரு ஆங்கில புஸ்தகத்துக்குத் தமிழில் பத்து விதமான பெயர்களுடன் மொழி பெயர்ப்பு ஏற்படுமாயின் புஸ்தக வியாபாரம் குறையக் கேட்பானேன்?

***

ஒரு மனிதனுக்குத் தேவாமிர்தமாயிருப்பது மற்றொருவனுக்கு நஞ்சாயிருக்கலாம். (What is one man's meat is another man's poison.)

பத்திரிகா அபிப்பிராயம்

" ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியாரால் பிரசுரிக்கப்படுவதும், ஸ்ரீமான் எஸ். ஜி. இராமானுஜலு நாயுடுவை ஆசிரியராய்க் கொண்டதுமான " ஆநந்த குண போதினி " என்னும் ஓர் சிறந்த அரிய தமிழ் மாதாந்தப் பத்திரிகையை வரப்பெற்றோம். இப் பத்திரிகையில் அநேக முக்கிய விடயங்கள் அடங்கியுள. மேலும் இதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் நாயுடுவை பத்திரிகை உலகம் நன்கு அறியும். ஆகவே இத்தகைய உயர்குணங்களமையப் பெற்ற ஒருவரை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகையின் சிறப்பைப் பற்றி ஈண்டு புகலவும் வேண்டுமோ? இப் பத்திரிகையில் அறிவிற்கு உணவான விஷயங்களும் ஞானப் பிரவர்த்தகர்களுக்கான பாகங்களும், தேச நலத்திற்கான நல்லுரைகளும் அடங்கியிருக்கின்றன. இப்பொழுது அந்நியர் கைகளிலகப்பட்டுக்கொண்டு, விடுதலையை யடைய வேண்டி சுதந்திரப் போர் நடாத்தி வரும் இத் தேயத்திற்குப் பத்திரிகைகள் மிக அவசியம். அதிலும், நமது தாய்மொழிப் பத்திரிகைகள் நாளுக்குநாள் அதிகரிக்க வேண்டியது அத்தியாவசியம். ஆகவே நம் தமிழ் நாட்டில் நாளுக்கு நாள் தமிழ்ப் பத்திரிகைகள் அதிகரித்து வருவதை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். இத்தகைய சிறந்த பத்திரிகைகளைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். ஒரு வருடத்திற்கு ஒரு ரூபாய்தான்." "ஸ்வராஜ்யா" (தமிழ்)

மனிதன் இறந்த பிறகு அவன் தேகம் கெடாத வண்ணம் தங்கம் வெள்ளி முதலியவைகளால் கிலிட் செய்யும் விதத்தை ஜெர்மானியர் கண்டு பிடித்துள்ளாராம். கிலிட் செய்த சவம் பளபள வென்று விக்கிரகத்தைப் போல் மின்னுகிறதாம். ஆயினும் அவவுருவம் உயிருடனுள்ள உருவத்திற்குரிய இயற்கை ஜோதியை இழந்து போயிருக்குமென்பது நிச்சயம். அதை மறுபடியும் ஊட்ட எவராலும் முடியாது. இறப்பதற்குமுன் ஒரு போட்டோ படமெடுத்து விட்டு, இறந்த பின்பும் ஒரு போட்டோ படமெடுத்து இரண்டையும் சோதித்துப் பார்த்தால் உண்மை தெரிய வரும். உயிர் உள்ள போது இநக்கும் ஜீவ காந்தி உயிரற்றபோது உடனே நீங்கி சவ ரூபம் தோற்றிவிடும்.

***

கப்பலில் வேலையாயிருந்த ஒருவன் அக்கப்பல் முழுகவே அவனும் இறந்து போனான். கணவன் வீட்டில் வாழ்ந்து வந்த அவனது ஸகோதரி அதே இரவில் தன் ஸகோதரன் கப்பலுடைந்து மூழ்குவது போல் ஒரு கனவு கண்டு அலறினாள். கடைசியில் அக் கனவு உண்மையாகவே முடிந்தது. அவளுடைய ரத்த பாசம் முன்னாடியே அவளுக்கு இவவிதம் கனவில் தெரிவித்தது போலும். உண்மையான பிரிய ஸகோதரர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் இவர்களின் கஷ்ட நஷ்டம் உடனுக்குடனே மனம் ஒருவாறு விகாரப் படுவதிலிருந்தும் தெரிந்து கொள்ளலா மென்பதற்கு இது ஒரு திருஷ்டாந்தமாகும்.

விநோதம்

பத்திரிகையின் உதவி :—

ராமன் :—இன்று காலையில் வந்த 'மெயில்' பத்திரிகை எங்கே?

கோபு :—அதை நீ பார்க்கமுடியாதப்பா. நான் தூங்கிக்கொண்டிருப்பது தெரியாமல் உன் வேலைக்காரன் மாடியின் கதவைப் பூட்டிக்கொண்டுபோய், இப்போதுதான் திறந்தான். என் "அவசரத்துக்கு" நான் என்ன செய்யட்டும்? "மெயிலில்" தான் "அவசரத்தை" சரி செய்து வெளியில் எறிந்தேன்.

***

அவசரம் :—

—"அவசரம் என்றால் அர்த்தமென்ன?"

—"தன் தேக உபாதையையோ, மன உபாதையையோ தீர்த்துக்கொள்ள ஆத்திரப்படுதலாம். எது தனக்கு அவசரமாகப்பட்டு, மற்றவர்க்கு அது அவசரமாகப் படவில்லையோ அதற்கும் "அவசரம்" என்று பெயர்.

***

மறதி :—

—"மறதி எப்போது வரும்?"

—"ஆபத்துக் காலத்தில் எல்லாம் மறந்துவிடும்; உதவி செய்யும்படி தனக்கு இருக்கும் நண்பர்களுக்குச் சொல்லி யனுப்பக்கூட நினைவு தடுமாறிப் போம். தன்னிடமுள்ள உயரிய ஔஷதங்களை யெல்லாம் சாமான்யமாய் நினைக்கவைக்கும். அன்னியரின் கையையே எதிர்பார்த்து அநாதையைப்போல் அலறச் செய்கிற ஆபத்தும், திடீரென்று வந்த பிணியும் விலகிய பிறகு எல்லா ஞாபகங்களும் தோன்றும். அப்படி-இப்படி செய்திருக்கலாமே யென்ற நினைவுகளும் அப்பால் வந்து கூடிக்கொள்ளும்."

***

தரவேண்டுமே யென்ற திகில் :—

வேணு :—அடே அதோ உன் அத்தை மூட்டை முடிச்சுகளுடன் வண்டியிலிருந்து இறங்குகிறாள் பார்.

நாணு :—தன் வீட்டுக்கு என்னென்னவோ வாங்கி வந்திருக்கலாம். நம்மைக் கண்டுவிட்டால் நமக்குத் தரவேண்டுமேயென்று திகில் படக்கூடும். அந்தப் பிசகை நமக்கு வேண்டாம். நீ பாராததுபோல் இரு. அந்தம்மாளும் பாராததுபோல் போய்விடுவாள். உலகப்போக்கு அப்படித்தான் இருக்கிறதப்பா.

***

பணம் பிடுங்கும் சமயம் :—

பிள்ளை :—அம்மா, அப்பா இன்று வெகு சந்தோஷமாக இருக்கிறார். இப்போதுதான் வெளியே போனார்.

தாய் :—அதை முன்பே சொல்லியிருக்கக் கூடாதா? அவர் சந்தோஷத்திலே என் செலவுக்கு ஏதாவது கேட்டு வாங்கி யிருப்பேனே?

சீட்டில் வேறு மருந்து :—

—"நேற்று எழுதித் தந்த சீட்டில் உள்ள மருந்தை இன்று அடித்து விட்டு வேறு மருந்தை ஏன் அந்த டாக்டர்—"தமிழ் வைத்திய சாலையின் வைத்தியர்" எழுதியிருக்கிறார்?"

—"சீக்கிரம் குணமாகிவிட்டால் என்ன செய்கிறதென்றுதான், வேறென்ன?"

***

வீட்டுக் கலகம் :—

பத்மி :—சீதா, ஏது உன் வீடு நாலுநாளாக நிம்மதியாய்க் கலகமின்றி யிருக்கிறதே. உன் மாமியின் குணம் திருந்தி தன் துவேஷத்தை மறந்து விட்டாளா?

சீதா :—எவ்வளவு உழைத்தாலும் என் மீதுள்ள துவேஷத்தை மாமி விடப்போகிறதில்லை. ஆனால், என் மாமிக்குத் தூண்டிவிட்டுக் கோள் சொல்லும் அவரது பொன்னான பேரப்பிள்ளைகள் அடுத்த கிராமத்துக்குப் போய் இருக்கிறார்கள். அவர்கள் வந்ததும் கோள் சொல்லலும், கலகங்களும் தொடங்கிக்கொள்ளும்.

***

தமிழ் ஆங்கில வைத்தியம் :—

—"தமிழ் ஆங்கில வைத்தியத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?"

—"ஆங்கில வைத்தியத்திற்கு எடுத்ததெல்லாம் கத்தி! உடனே அறுத்துத் தீர்ப்பதாம்! தமிழ் வைத்தியத்துக்கோ "வாய் பிடித்தால் தான் மருந்து பிடிக்கும்" என்று சொல்லி வாயையும் வயிற்றையும் வேகவைத்துப் புண்ணாக்கி ரணமாக்கித் தீர்ப்பதாம்! ஆயினும், எல்லாம் இப்படியே யல்ல.

***

கைகண்ட மாத்திரை :—

வைத்தியர் :—என் மாத்திரைகளைச் சாப்பிட்டிருந்தால் அவர் பிழைத் திருப்பார்?

மற்றவர் :—அவர் தெருவில் வருகையில் மோட்டார் ஏறியல்லவோ இறந்தார்?

வைத்தியர் :—சரிதான், என் மாத்திரையைத் தின்றிருந்தால் வெளியே நடந்து போகக் கூடுமா? உள்ளேயே படுக்கையில் வெகு காலம் இருக்க லாமே, வண்டியும் வந்து ஏறாதே.

ஒரு பெண், காட்டில் தன் குழந்தையுடன் புலியின் முன்பு சிக்கிக் கொண்டாள். தப்பித் தோட மார்க்க மில்லையே யென்று நினைத்தவள் ஏதோ ஒரு எண்ணங் கொண்டு கையிலிருந்த சிறிய குடை யொன்றைப் புலியின் முகத்துக்கு நேராகப் பிடித்தாள். ஒரு தடவை அதை மூடுவதும், மறுதடவை திறப்பதுமாயிருக்கக் கண்டு புலி சில நிமிஷங்கள் வரை பிரமித்து நின்றது. பல தடவை அவள் இவ்விதம் செய்ததில் புலிக்கே ஏதோ கிலி தோன்றி ஓடி விட்டது. சமய யுக்தி சாலவும் பெரிது. கைக்குடைக்கு மாடுகளும் பயப்படுகின்றனவன்றோ?

வாயுள்ள பிள்ளை

ஒரு வர்த்தகசாலையில் வேலை செய்து கொண்டிருந்த பையன் தனக்குச் சம்பளம் உயர்த்த வேண்டுமென்று மானேஜரிடம் கேட்டுக் கொண்டான். அவர் அவனை நோக்கி சொந்தக்காரரைக் கேள் என, பையன் மாடிக்குச் சென்று, யாரையா இவ்வர்த்தக சாலைக்குச் சொந்தக்காரர் என, மிஸ்டர் பின்ஹோ என்பவர், ஏன் அப்பா, நான்தான் சொந்தக்காரன், எதற்காக என்னைத் தேடுகிறாய்? என்றார். உடனே அந்தப் பையன் அவரை வணங்கி, "ஐயா நான் உங்களிடம் அநேக வருஷங்களாய் உழைக்கிறேன். என்னுடைய சம்பளம் இன்னும் உயராமல் வாரம் ஒன்றுக்கு 10-ஷில்லிங்காகவே இருக்கிறது. தாங்கள் தயை செய்து அதை உயர்த்த வேண்டும்" என்றான். மிஸ்டர் பின்ஹோ, "அடே அந்தக் காரியம் மானேஜர் செய்ய வேண்டியது, அவரிடம் கேட்டுக் கொள்" என, சிறுவன், "நான் மானேஜரைக் கேட்டதற்குத்தான் தங்களைப் பார்க்கும்படி அவர் அனுப்பினார்" என்றான். அதற்குப் பின்ஹோ துரை "உனக்கு வாரமொன்றுக்கு 10-ஷில்லிங் போதாதா? உன்னைப்போல் நான் சிறு வயதாயிருக்கையில் இவ்வளவு தான் சம்பாதித்தேன்" என்றார். பையன் "ஆம், இருக்கலாம். என்னைப் போல் உங்களுக்கு அத்தனை சுறு சுறுப்பும் ஊக்கமும் இருந்திராது. ஆகையால் உங்களுக்குச் சம்பளம் உயர்த்த வில்லை போலும்" என்றான். சொந்தக்காரர் அவனுடைய ஸமத்காரமான சொற்களுக்கு மகிழ்ந்தவராய், அவனுடைய சம்பளத்தை வாரம் ஒன்றுக்கு 20-ஷில்லிங்காகச் செய்திருப்பதாய்க் கூறினார். எதற்கும் தைரியம் வேண்டும். வாய் விட்டுப் பேசவேண்டும். பேசாமடந்தையாய் இருக்கலாகாது. ஆனால் மரியாதையையும் கைவிடப்படாது. குதர்க்கத்திலும் விவகார மார்க்கத்திலும் புகுந்து விடுவது முட்களுள்ள பாதையை மிதித்து விட்டதற்குச் சமமாகும். சாந்தமும், விநயமும், இனிமையுமாகப் பேசிப் பிறர் மனத்தைக் கவரவேண்டும். பேசுவதில் யதார்த்தமும் கௌரவமும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். ஐச்வரிய ஸம்பன்னர்களுடைய மனமும், எஜமானர்களுடைய ஹிருதயமும் சில சமயங்களில் இளகியும், வேறு ஸமயங்களில் கடினமாயும் இருக்கக் கூடும். சமயந் தெரிந்து காலமறிந்து எதையும் ஹிதவசனமாக உரையாடிக் காரியசாதகம் செய்து கொள்ள வேண்டும்.

கன்னடத்துக்கும் தமிழுக்கும் அநேக பதங்கள் பொதுவாயிருக்கின்றன உதாரணமாக அரசு என்பது அரஸு என்று வழங்குகின்றது. என்னரஸா என்றால் என்னுடைய அரசனே என்று அர்த்தம். அத்தேமகனே என்பது அத்தைமகனே, அதாவது மாமியார் புத்திரனே என்று அர்த்தமாகும். மாமன்மகனே என்பது லக்ஷ்மீபுத்திரனே என்று பொருள்படும். மா என்பது லக்ஷ்மி என்ற அர்த்தத்தைத் தருகிறது. பட்டத்தரஸா என்றால் பட்டத்து ராஜனே என்றாகும். குதிரை என்ற பதம் இரண்டு பாஷைகளுக்கும் பொதுவாயிருக்கிறது. ஆகவே, இரண்டு பாஷைகளுக்கும் அநேக விதங்களில் ஒற்றுமை யுண்டென்பது தெற்றெனப் புலப்படுகிறது.

சென்று போன நாட்கள்.

2. எம். வீரராகவாச்சாரியார் பி. ஏ.

சென்னை மாகாணத்தில் சமாசாரப் பத்திரிகைகளைத் தோற்றுவித்த முக்கியஸ்தர்களில் இவரும் ஒருவராவர். சென்னையில் 1878-ம் வருஷ முதல் நடைபெற்றுவரும் "ஹிந்து" ப் பத்திரிகையின் மானேஜராகவும் பங்காளியாகவும் 1898-ம் வருஷம் வரையில் இருந்துவந்தது மன்றி, அந்த வருஷத்திற்குப் பிறகு 1905-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் வரையில் அப் பத்திரிகையின் சொந்தக்காரராகவும் இருந்துவந்தார். அவர் வெகு வருஷ காலமாய் "ஹிந்து" ப் பத்திரிகையின் சொந்தக்காரராக இருந்தது மட்டு மன்று. 1884-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட "சுதேசமித்திரன்" பத்திரிகையின் பத்திராசிரியராய் ஒரு சுமார் 15-வருஷ கால மிருந்தார். அதற்குப் பிறகுதான் ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் தாம் ஏகதேசத்தில் நடத்த ஆரம்பித்ததாகும். சுதேசமித்திரனுக்கும் தமக்கும் இருந்த சம்பந்தம் ஒழிந்து போகவே ஸ்ரீ வீரராகவாச்சாரியார் மறுபடியும் "இந்து நேசன்" என்ற ஒரு தமிழ் வார இருமுறைப் பத்திரிகையை நடத்த ஆரம்பித்தார். அந்த ஆரம்ப காலத்தில் "இந்துநேசன்" பத்திரிகை வெகு நேர்த்தியாய் இருந்தது. பிரபல பண்டிதர்கள் அநேகர் அதற்கு விஷய தானம் செய்வாராயினர். "இந்துநேசன்" பத்திரிகையில் தோன்றிய அநேக விஷயங்கள் பிறகு நூல் உருக்கொண்டும் வெளிவந்துள்ளன.

ஆனால், தமது தேக அசௌக்கியம் காரணமாகவும் வேறு சில காரணங்களைப் பற்றியும் "இந்துநேசன்" பத்திரிகையையும் "ஹிந்து" பத்திரிகையை விற்றது போலவே அவர் விற்றுவிடும்படி நேர்ந்தது. இச் சென்னை மாகாணத்தில் ஜனங்கள் பேசும் தேச பாஷையில் சமாசாரப் பத்திரிகையொன்றை நடத்தத் துணிந்து முன்வந்தவர் ஸ்ரீமான் வீரராகவாச்சாரியாரை யன்றி வேறெவரு மில்லை. ஆனால், அவர் ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயரைக் கலவாமல் எந்த யோசனையும் காரியமும் செய்ததில்லை. இருவரும் தமிழ்ப் பாஷையில் சமாசாரப் பத்திரிகை நடத்தியதைப் பார்த்துக்கொண்டுதான், மற்றவர்கள் இப்போது தேச பாஷையில் பத்திரிகைகள் நடத்தி வருகிறார்கள்.

ஸ்ரீ வீரராகவாச்சாரியார் பத்திராசிரியராக மட்டுமன்று, ஜனத் தலைவராயும், பொது விஷயங்களில் மிகவும் சம்பந்தப்பட்டவராகவும் இருந்து வந்திருக்கிறார். 1887-ம் வருஷத்திய சென்னைக் காங்கிரஸில் இவர் பிரதானஸ்தரா யிருந்து உழைத்தார். நல்ல நிர்வாகசாலி, சாமர்த்தியசாலி, வெகு ரசிக, யாரிடத்தும் பிரியமாய்ப் பேசுவார். கைமட்டும் அவ்வளவு தாராள மல்லவாம். முப்பது வருஷ காலம் அவர் தேசசேவை புரிந்திருக்கிறார். ஆங்கில மாதிரியில் சொராய் முதலியன உடுத்து விளங்குவது அவர் இயல்பு. இவர் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்தவர். அந்த ஜில்லாவிலுள்ள ஆத்தூர் கிராமத்தில் 6—10—1906-ல் காலமாயினர். அவருக்கு இறக்கும்பொழுது 50-வயதுக்கு மேலில்லை. அவரது பத்திரிகைகளா யிருந்த ஹிந்து, சுதேசமித்திரன், இந்துநேசன் இப்போதும் நடந்து வருகின்றன.

குதிப்பதற்கு முன் பார்த்துக் குதி

சில தவளைகள் தண்ணீரைத் தேடிச் சென்றன. ஒரு கிணற்றில் குதிப்பது பிசகு. ஒரு தரம் குதித்தால் மறுபடி அதனின்றும் கரை யேறுவது பிரயாஸம் என்று ஆலோசித்து அதை விட்டு அகன்றுபோயின. இதைப்போல் கலியாணம் செய்து கொள்வது அவசியமாயினும், தகுந்த பெண்ணைத் தேடி மணம் புரிய வேண்டும். அவசரப்பட்டு எவ்வாறேனும் விவாகம் நடந்தாற் போதுமென் றெண்ணி துஷ்டகுணமுள்ள மாதினை மணந்து, பின்னர் ஆயுளுள்ளவரை கஷ்ட மனுபவிப்பதிலும் சும்மா விருப்பது நன்மை. அநேகர் தாஙகள் கலியாணம் செய்து கொள்ளும்போதே பெண்ணின் தன்மையை யறியாமல் பந்துக்களின் வார்த்தையைக் கேட்டு மோசம் போய், விவாகம் செய்துகொண்டு, அந்தோ! பின்னர் வருத்த மடைகிறார்கள். ஷேக்ஸ்பியர் மகாகவி பின்வருமாறு கூறுகிறார் :—

Thy husband is thy lord, thy life, thy keeper
Thy head, thy sovereign : one that cares for thee,
And for thy maintenance : commits his body
To painful labour, both by sea and land ;
To watch the night in storms, the day in cold,
While thou liest warm at home, secure and safe
And craves no other tribute at thy hands,
But love, fair looks, and true obedience ;
Too little Payment for so great a Debt.

அதாவது :—ஸ்திரீயை நோக்கி,

"உன் புருஷனே உனக்குத் தெய்வம், அவனே உன் பிராணன், அவனே உன் ஸம்ரக்ஷகன், உன்னுடைய தலைவனும் அவனே, உன் புருஷனே உனக்கு அரசன், உன்னைக் கவனிப்பவன் அவனே, உன்னைப் போஷிப்பவனும் அவனே, சரீரப் பிரயாஸையோடு உழைத்து உன்னைச் சுகத்தில் வைப்பவன் உன் கணவனே யன்றி வேறல்லர். இவ்வளவு உபகாரம் செய்யும் அவன் உன்னிடம் எதிர்பார்ப்பது—பிரேமை, ஸந்தோஷகரமான முகம், வணக்கம் ஆகிய மூன்றுதான்."

என்கிறார். இத்தகைய குணசாலிகளான பெண்களையே ஆராய்ந்து, தேடி விவாகம் செய்து கொள்ளவேண்டும். "பேய் கொண்டாலும் கொள்ளலாம், பெண் கொள்ள லாகாதே" என்று ஒரு கவி பாடியதில், அதில் வெகு உண்மைகள் நிறைந்திருப்பதை நாம் உணர்ந்து எச்சரிக்கை பெற வேண்டும். துர்க்குணம் அமைந்த பெண்ணினும் பேய் நன்று என்பது அதன் பொருள்.

கண்ணாடி முகத்தைக் காண்பிக்குமா?

கண்ணாடி முகத்தைக் காண்பிக்குமென்றால் இருட்டில் கண்ணாடியைப் பார்த்தால் முகம் ஏன் தெரியவில்லை? இரவில் விளக்கின் உதவியின்றி கண்ணாடி முகத்தைக் காண்பிக்காது. விளக்கின் உதவி யிருந்தாலும் குருடனுக்கு முகத்தைக் காண்பிக்காது. (1) கண் பார்வையும் (2) விளக்கும் (3) கண்ணாடியும் சேர்ந்தால் முகம் காணப்படுகிறது. இம் மூன்றில் ஒன்றுதான் முகத்தைக் காட்டுகிறதா? இம் மூன்றும் சேர்ந்தே முகத்தைக் காட்டுகிறதா? கண்ணாடி முகத்தைக் காண்பிக்கவில்லை; கண்ணொளியும் விளக்குமே முகத்தைக் காட்டுகின்றன. இவ் விரண்டு மிருந்தாலும் கண்ணாடியின்றி முகம் தோன்றவில்லை என்னில் அதன் உண்மையை யாராய்வோம். கண்ணாடியில் உருவம் தோன்றுவ துண்மையானால் அக் கண்ணாடியில் தோன்றும் உருவமானது பார்க்கின்றவர்க்கு எதிராகக் காணப்படுகிறது. அப்படித் தோற்றப்படுவதும் பார்க்கின்றவன் வலது தோளில் வேஷ்டி யிருந்தால் அவ் வுருவில் இடதுபக்கம் தென்படுவதும், பார்க்கின்றவன் கண்ணாடிக்கு எத்தனையடி தூரத்தில் இருக்கின்றானோ கண்ணாடியில் தோன்றும் உருவமும் அக் கண்ணாடிக்குள் அத்தனையடி தூரத்தில் காணப்படுவதும் கூடாது. ஆதலால் தன் கண்ணால் தன் முகத்தைப் பார்ப்பதற்குக் கண்ணாடியைப் பார்க்கின்றான். உடனே கண்ணொளியானது நேரே புறப்
பட்டுப் போய் கண்ணாடியில் பட்டு, பார்த்தவன் முகத்தைத் திரும்பிப் பா
கிறது. ஆதலால்தான் கீழ்க் காட்டிய வலதுபக்கம் உள்ளது இட
மாகவும், கண்ணாடிக்கும் பார்க்கிறவனுக்கும் எவ்வளவு தூரமோ
தூரத்திலேயே அக் கண்ணாடியில் தோன்றுவதும் பொருந்தும்.
யில் உருவம் இருக்கிறதென்பது பிராந்தியறிவாகும். பிராந்தி
கயிற்றைப் பாம்பாக நினைப்பதாகும். இல்லாததை உள்ளதே
வது பிராந்தி யறிவாகும். இந்தப் பிராந்தியே உலக மாய்கை

எதைச் செய்தாலும் நிஷ்களங்கமான ஹிருதயத்தே
மான விசுவாசத்தோடும் பரமேசுவரனுக்குப் பிரீதிகரமாய்
சிலாக்யம். மனஸ்பூர்வமாய் ஒருவரிடம் நடந்து கொள்
புக்கு வெளி முகமாய் நடந்து கொள்ளும் அன்பும்
போம். உலகத்தில் ஜனங்கள் அன்பொன்றையே
அலைவர். ஒருவரைத் தேடிக் கொண்டு ஒ
நமக்குப் பிரியமானவர்கள் அவ்வீட்டில் இ
வீடாகி விடுகிறது. உடனே திரும்பி வி
இருப்பதற்கு நமது மனம் ஸகிப்பதில்லை
குள்ளிருந்து நம்மைக் கண்டதும் வெ
நமது மனம் அடையும் பரவசந்தான்

பார்ஸிஜனங்கள் இறந்துபோ
ஒரு கோபுரத்தின் மீது வைத்துவி
முதலியவைகள் பிணத்தைத் தின்ட

சமயோசிதச் சொற்கள்

நன்மைக்கும் அழகு முதலியவற்றுக்கும் பிரயோகிக்கிற நல்ல என்கிற சொல்லானது கொடுமைக்கும் சில இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. அநேக விபத்துக்களையுண்டுபண்ணும் கொடுமையான மழைக்கு நல்ல மழை என்று சொல்லப்படுகிறது. கடித்த நிமிஷத்தில் உயிர் போக்கும் நாகத்தை நல்ல பாம்பு என்று வழங்கிவருகிறோம். எனவே எந்தச் சொல்லையும் சமயத்துக்குத் தக்கபடியும் இடத்துக்குத் தக்கபடியும் யூகித்தறிந்து பொருள்கொள்ளவேண்டியதாகிறது. இப்படியே, நல்ல பாதை, நல்ல வாள், நல்ல பெண், நல்ல வீடு என்ற பிற சொற்களுமுள. இவை உச்சரிப்புக் கேற்றபடி நன்மையதாயும் தீயதாயும் பொருள்கொண்டு நிற்கும், "கொடுமை" என்கிற பதமும் சில இடங்களில் நல்லதுக்கு உபயோகப்படும். "கொடிய கற்புடையாள்" என்னும்போது, அங்குள்ள "கொடிய" என்னும் சொல்லானது அளவிறந்த பெருமையைக் காட்டுகிறது. 'கொடிய தவம்' என்னும்போது கொடிய என்ற பதம் தவத்தின் மேன்மையைக் காட்டுகிறது.

இவ்விதமே "போகிறேன்" என்று விடைபெறுவதற்குப் பதிலாக "வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டு புறப்படுதல் வழக்கமாக இருக்கின்றது. பாரதத்தில் தர்ம புத்திரர் தம்மிடம் யுத்தத்திற்குச் செல்ல
நுமதிவேண்டிய அபிமன்யுவை எவ்வளவோ தடுத்தும் கேளாமையால்,
மனவருத்தத்துடன் 'போ'—என்று விடைகொடுத்தனுப்பினராம்.
அபிமன்யூ திரும்பி வாராமலே யுத்தகளத்தில் மடிந்துபோக, அது
ம புத்திரர், தாம் "போ" என்று சொன்னதனால், அவன்
பாய்விட்டதாயும், அவ்விதமின்றி "போய் வா" என்று
, தமது வாக்குக்காகவேனும் அவன் ஒரு சமயம் திரும்பி
ம என்றும் நெஞ்சம் கரைந்து உருகினராம். அன்று முத
'—என்று சொல்லாமல் "போய் வா" என்பது வழக்
ாயிற் றென்பர். இவ்விதச் சொற்களையும் சமயோசித
கொள்ளவேண்டும்.

வ்வாயோ வெறுவாயோ, என்பர். அவ்விதமான ஆகாத
ார மென்றும், மரித்தான் என்ற சொல்லை, "ஆசார்
தான்," "சிவலோக பதவியுற்றான்" என்றும் எதிர்
றைச் சொற்கள் சாதாரண விஷயங்களிற்
நக்கு விவாகம்வேண்டுமா எனில் நாணத்
த்துடன் நோக்குவர். அதற்குவேண்டா
ண்டுமென்பதே அங்கு கருத்து. இவ்
தம் போதும் போதும் என்பார்க்கு
ாக இலையில் பரிமாறுவதும், அவர்
நிரம்ப இட்டாள் மகராசி" என்று
ில் "போதும் போதும்" என்ற
ன்ற பொருளையே கொள்ள நேரு
ரை வரும்படி அழைக்கும்போது
ற—வரவில்லை—நீங்கள்

போங்கள்'' என்கிறார். அவரது உட்கருத்தென்ன? வருவதற்கே அவர் இருந்தாலும் வலுவில்தானே சொல்லிக்கொள்ளக் கூடாதென்று இப்படி எதிர்மறையாகப் பேசுகின்றார். அவர் அவ்விதம் கூறினும் கட்டாயப் படுத்தி யழைத்த பின்பு அவரும் வருவதற்கு இணங்கிவிடுகிறார். எனவே, அவர் முன்பு வர ஒரு மாதிரியாக மறுத்ததை 'உலக வழக்கு' என்றே பொருள் கொள்ளவேண்டும். இன்னும் சிலரை இன்றைய போஜனத் திற்கு வாருங்கள் என்று அழைக்கிறார்கள். அழைத்தார்களே யென்று உடனே போய்விடுகிறதா? வெளிக்கு ஒப்புக்கு அழைத்த பான்மையா யும், உள்ளுக்கோ அவர்கள் புசிக்க வரமாட்டார்க ளென்றும், ஆயினும், அழைப்பதுபோல் ஒரு வார்த்தை அழைத்துவிடுவோ மென்றும் எண்ணி அழைப்பதா யிருக்கும்போது, அது தெரியாமல், அவர்கள் அழைத்தார் களே என்று புறப்பட்டுவிடுவது மரியாதையாகுமா? அவர்களுடைய சம யோசிதச் சொற்களுக்குத் தகுந்த பொருளை நாம் தெரிந்துகொண்டு நடப்பதன்றோ மேன்மை. இவ்விதமே மற்ற சமயோசிதச் சொற்களையும் உணர்ந்து கொள்க.

பல கனவான்கள் நிறைந்துள்ள சபையில் பிரகாஸமா யெரிந்து கொண்டிருக்கும் தீபத்துக்கு எண்ணெய் குறைவதால் வெளிச்சம் குன்றும். அப்போது ஒருவன் அதைப்பார்த்து எண்ணெயையூற்றித் திரியைத் தூண்டி முன்னிலும் அதிக வெளிச்ச முண்டாகும்படி செய்கிறான். இதற்காக அவ னிடம் அங்கு கூடியுள்ள கனவான்களுக்கு ஸந்தோஷம் ஜனிக்குமே யன்றி அதிருப்தி யுண்டாகாது. அதுபோல், பல சந்தாதார்களுக்கும் இந்த "ஆநந்த குணபோதினி" ப் பத்திரிகை மீதுள்ள அபிமானம் குன்றாமல் வளர்ந்தோங் கும்படியும், தங்கள் மித்திரர்களையும் இப்பத்திரிகைக்குக் கையொப்ப நேயர்களாக்கும்படியும் அடிக்கடி நாம் தூண்டி வருவது திருப்தியா யிருக்கு மென்றே நம்புகிறோம். அவ்வுத்தம சிரேஷ்டர்களின் கருணை பெருகுக.

***

புத்திக்கு முக்கிய ஆதாரம் மூளை யென்பது யாவரும் அறிந்த விஷ யம். அந்த மூளை ஏழாவது வயது வரையில் அதி வேகமாக வளர்ந்து 40-அவுன்சு நிறையுள்ளதாகிறது. 7-வயதுக்கு மேல் 14-ஆண்டுகள் வரைக்கும் அதன் வளர்ச்சி சற்று குறைந்து 14-ம் வயதில் 45-அவுன்ஸ் நிறையுள்ளதா கிறது. பதினாறாம் வயது முதல் 20-பிராயம் மட்டும் மூளையின் வளர்ச்சி இன்னும் குறைந்து, மனிதனுக்கு 20-ம் வயதில் பூரண நிறையுள்ள தாகிறதாம்.

***

மகம்மதிய சட்டப்படி ஒருபுருஷன் பலபெண்களைக் கலியாணம்செய்ய லாம். ஒரு ஸ்திரீ விதவையானாலன்றி தன் கணவன் உயிரோடிருக்கையில் தன்னை அவன் திரஸ்கரித்தாலும், அவள் வேறொரு புருஷனை விவாகம் செய்யப்படாது. அவ்வாறு விவாகம் செய்துகொண்ட ஸ்திரீயும் இரண்டா வது புருஷனும் தண்டனைக்கு உட்படுவார்களாம். கல்கத்தா ஹைகோர்ட் டில் இப்படி ஒரு கேஸ் வந்து சிக்ஷையும் கிடைத்தது.

* நட்பு

ஒருவரோ டொருவர் கூடியிருத்தல் மாத்திரமே நட்பாகாது; அங்ஙனம் கூடியிருந்து இன்பவுரை யாடி வேண்டுவன வுதவிப் பிரியம் பாராட்டுதலும் அவ்வாறேயாம். கஷ்ட காலத்தில் கூட விருந்து அனுபவித்துச் சோகத்தை பாகித்துக்கொள்ளாமல் சந்தோஷ சமயத்தில் சடுதியி லடைந்து போகத்தில் பொருந்துதலும், ஆகவேண்டிய காரியத்தை வேகமாய் முடித்துக் கொள்ளப் பாகுபோலப்பேசி உறவுகொண்டு காரியம் முடிந்ததும் தூரத்தில் விலகுதலும், இன்னும் இவை போன்ற பிறவும் காரிய வுறவேயன்றி நட்பாதல் யாங்ஙனம்? "அந்த இலையின்மே லிருந்தால் மிக்க பிரகாசத்தோடு முத்தைப் போல் ஒளிர்வோம்" என்று தன் னியற்கைக்கு மாறாய், தாமரையிலையோடு ஒட்டாமல் ஒட்டி யொளிரும் தண்ணீர்த் துளிகளைப் போல, 'ஆ! அவன் தனிகன்! அவனிடம் நல்லவனாக நடந்து கொண்டால் நமக்கு நன்மையுண்டு' என்று பணமும் புகழும் பெற்றோரைப் பின்பற்றித் திரியும் புல்லறிவாளரின் சுயநல உறவு உண்மை நட்பாவது எப்படி? இத்தகைய வஞ்சகரின் போலிக்கேண்மை—உதட்டு உறவு—நட்நன்றி நஞ்சேயென்று வற்புறுத்துதல் மிகை. அவ்வாறாயின் நட்புத்தான் யாது? சுற்றத்தார் உறவும், உடன் பிறந்தோர் தொடர்பும், மனைவியின் இணக்கமும், குணம் அழகு முதலியவைகளால் பிறர்மே லேற்படும் பிரியமுந் தான் நட்போ? எனில்,—அன்றன்று; அவைகளை நட்பெனக் கொள்ளுதல் சற்றேனும் பொருந்தாது. எங்ஙனமெனில்,—

எவை நட்பு அல்ல?

மனிதர் ஒருவரை யொருவர் நேசித்து, ஒருவருடைய சுகதுக்கங்களை யொருவர் பங்கிட்டுக் கொண்டு, பரஸ்பரம் ஒற்றுமையாக வாழவேண்டுமென்றே 'அன்பு' என்ற ஓர் இதய வுணர்ச்சியைக் கடவுள் நமக்கு அளித்திருக்கிறார். இந்த வுணர்ச்சியின் தூண்டுதலாலேயே, மனிதர்கள் ஒருவரை யொருவர் விரும்பி நாடுதலை யியல்பாகக் கொண்டிருக் கின்றனர். ஆயினும் இவ்வன்பு—இவ்வாறு மனிதர்களில் ஒருவரை யொருவர் விரும்பி நாடும்படி செய்யும் தூண்டுகோல்—உணர்ச்சி பலவகைப் படும் என்பது அறிவாளிகளுக்குப் புலப்படாமற் போகாது. உதாரணமாக, ஒருவர் இன்னொருவர்மேற் கொள்ளும் அன்பை, உறவின் முறையாரிடங் கொள்ளும் அரிய அபிமானம், உடன்பிறந்தோர்மே லுள்ள சகோதர வாஞ்சை, மக்கள் மேல் வைக்கும் புத்திரவாத்சல்யம், கன்னியின்பாற் கொள்ளும் காதல், பிராண சிநேகரிடம் ஏற்படும் உணர்ச்சி யொத்த உள்ளன்பு, மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்கள் பாலுள்ள பயபக்தி என்று அறுவகையானதாகப் பிரித்துக் கொள்ளலாம். இவ்வாறு பலவகைப்படும் இதய வுணர்ச்சிகட்கெல்லாம், அன்பே—மனவுருக்கமே—மூல காரணமாயினும், ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதனவே போல் இவை அநேக விஷயங்களில் வேறுபடுகின்றன வன்றோ? மேலும், [illegible]ப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, புளிப்பு,

அன்பு, அறிமுகம், நட்பு, இவற்றின் பேதம்.

* All Rights reserved t[illegible]

கார்ப்பு, தித்திப்பு எனப்படும் அறுசுவையினுள் ஒன்றையாவது விரும்பாதார் எவருமிலர்; அவ்வாறே நம் அறுவகை யன்பினுள்ளும் ஒன்றாவது அதற்கு மேற்படவாவது கொள்ளாதார் இலர். இங்ஙனம் பலரும் நம்மேல் அன்பு கோடல் கூடும்; நமக்கும் பலரிடை பிரிய மேற்படலாம். ஆனாலும் அவர்க ளெல்லோரும் நம்மிடம் சிநேக வாஞ்சை கொள்ளுவது துர்லபம்; நாமும் அவர்களெல்லோரையும் சிநேகிப்பது சாத்தியமல்ல. எனவே நம்மை யறிந் திருக்கும் ஏனையோர்—மேலே காட்டிய அறுவகையன்பினுள் ஒன்றேனும் நம் மேற் கொள்ளாதார்—நமக்கு அறிமுகமானவர்களேயன்றி நண்பர்களாக வாவது, வேறு எத்தகைய உறவினர்களாகவாவது ஆகார். இரண்டொருவ ரிடமே யன்றிப் பலரிடமும் நாம் நட்புக்கொள்ளுதல் இயலாது. '(ஆரு மற்றதே தாரம்;) ஊரிலொருவனே தோழன்' என்பது பழமொழி.

நட்பு இன்ன தென்பது.

ஆயின், எதுதான் நட்பு? எனின்,—அஃது கள்ளமின்றி யுள்ள அன்பு வெள்ளத்தால், உடலிரண்டெனினும் உள்ள மொன்றாகப் புணர்த்தும் உணர்ச்சியே. அதாவது இன்னதென்று விவரிக்க வியலாத ஒரு வகை மனவுருக்கத்தால் மனிதருக்குள் ஏற்படும் பரஸ்பர நம்பிக்கையாலாகும் சம்பந்தமே நட்பு. இருவருடைய முன்னேற்றத்தைக் கருதிய அதிசயமானதும் குறைவு படுதல் இல்லாததுமான ஒருவகை அன்பின் பிணைப்பே நட்பு. நம் நடக்கையை நலப்படுத்தி நமக்கு இன்ப வாழ்வை இனிது ஊட்டும்படி கடவுள் கருணை கொண்டருளிய நிகரற்றதான நிதியே நட்பு! அதிகமேன்? மனிதர் தங்கள் சுகத்தையும் சந்தோஷத்தையும், நன்மையையும் வன்மையையும், அறிவையும் நெறியையும் விருத்தியாக்கிக் கொள்ளுமாறு பழக்க முதிர்ச்சியின் பயனாகத் தம் நற்குணங்களிலிருந்து உற்பத்தியாகும் நல்லுணர்ச்சிகள் ஒருமைப்படுத லால், ஒருவரையொருவர் உள்ளன்போடு விரும்பி, மனமொழி மெய்களால் எக்காலத்தும் எவ்வித வேறுபாடுமின்றி, நேசித்தலே நட்பாகும். இஃதே, கடவுள் மனிதருக்கருளிய வரங்க ளெல்லாவற்றினுஞ் சிறந்தது. 'நட்புந் தயையுங், கொடையும், பிறவிக்குணம்' ஆம்.

நட்பின் அவசியம்.

ஒவ்வொரு மனிதனும், தாய்வயிற்றிலிருந்து இவ்வுலகிற் பிறந்தது முதலாக, இவ்வுலக சம்பந்தத்தை யொழித்து இறந்துபோகும்வரையில், பிறர் உதவியின்றி உயிர் வாழ்தல் இயலாது: அவன் தனக்கு வேண்டிய அற்பமான பொருளையும் மற்றவர்களோடு ஒத்து உழைப்பதின் பயனாக வன்றித் தானே பெறுதல் அசாத்தியம். இதைநோக்கியே, "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்று சான்றோர் சொல்லு கின்றனர். எனவே மனிதர்களுக்குள், பரஸ்பரசம்பந்தம்—உதவி—ஒற்றுமை இல்லாவிடில் மனிதவர்க்கம் பாழாகும். ஆதலின், பலர்சேர்ந்து ஒருமிக்க வாழ்வதே மனித வியற்கை யாக விருக்கிறது. ஆன்ம விசாரஞ் செய்யும் ஞானியர்க்கே ஏகாந்தம் இனியதாகும்; ஏனையோர் கூடிவாழ்தலையே நாடுவர். அவ்வாறு அவர் கூடி வாழ்ந்தாலும் அன்பில்லாத காலை அவ் வாழ்க்கையாற் பயனில்லை. ஆகவே, அவ்வன்பின் ஒரு வகைத்தான இதயவுணர்ச்சி—நட்பு—நம் வாழ்க்கைக்கு அவசியமாகிறது. (தொடரும்.)

லக்ஷ்மீ வேங்கடரமணன்.

சிறு மணித் திரள்

(206-ம் பக்கத் தொடர்ச்சி.)

137. ஆகாசத்தில் தோன்றும் நக்ஷத்திரங்களுக்குச் சந்திரன் புருஷன் என்று புலவர் கூறுவர். சந்திரனாகிய புருஷன் தன் ஸ்திரீகளாகிய நக்ஷத்திரங்களுடன் இரவில் தோன்றுகிறானேயன்றிப் பகலில் வருவதில்லை. அது போலவே, தம்பதிகளும் எத்தனை பிரேமையிருந்தாலும் நாணத்துடனும் ஒரு எல்லைக்குட்பட்டுத் தமது பிரீதி விஸ்வாசங்களை வெளியிட்டுக் கொள்ள வேண்டும்.

138. கற்றாழையைத் தொட்டாலே கை நாறும். இதுபோல் சில மனுஷ்யர்களுடைய ஸ்பர்சத்தால் மனம் அசுத்தமாகும். நமது சிந்தையும் அவர்களின் வழியில் செல்லத் துணிந்து பள்ளத்தில் விழும். துர்க்கந்தம் வீசும் பதார்த்தங்களைத் தொட அஞ்சுவதுபோல், அசுத்தர்களின் ஸகவாசத்தையும் தூர அகற்ற வேண்டும்.

139. முதல் எழுத்தைச் சேர்த்தால் வெறுப்புண்டாகிறது. சுத்தம், மானம், கிரமம் முதலிய பதங்கள் இனிமையைத் தருகின்றன. அசுத்தம், அவமானம், அக்கிரமம் முதலிய வார்த்தைகள் கேட்பதற்கு வெறுப்பை விளைவிக்கின்றன. மூத்தாள் என்னும் பதம் அநேகமாய் மூதேவிக்கே உபயோகமாகிறது. இதுபோலவே முதுமை வெறுக்கத்தக்கதாயும், இளமை விரும்பத்தக்கதாயும் இருக்கின்றன. யோக்கியன் என்றால் திருப்தியும், அயோக்யன் என்றால் கடுங்கோபமும் உண்டாகின்றன. இதற்குக் காரணம் முதல் எழுத்தைச் சேர்த்ததன்றோ?

140. குரோதம் உண்டானால் விரோதம் உண்டாகும். இரண்டு கக்ஷிகளில் ஒரு கக்ஷியார் கூறும் வார்த்தையாலோ, அல்லது செய்யும் கொடுமையாலோ மற்றொரு கக்ஷியார் குரோதம் கொண்டு விரோதிக்கிறார்கள். இதனால் இரு திறத்தார்க்கும் சண்டை பலக்கிறது. குரோதம் கொள்ளாவிட்டால் விரோதம் இல்லை. ஒவ்வொருவரும் பிறருடைய வார்த்தையைக் கேளாமல் சாவதானமாய்த் தமது புத்தியையே உற்ற நண்பனைப் பாவித்து யோசித்தால் பகை முற்றாது. ஸங்கட முண்டாகாது.

141. "ஹம்ஸ விம்சதி" என்று கன்னட பாஷையில் ஒரு புஸ்தகமிருக்கிறது. இதில் துராசாரம் செய்ய எத்தனித்த ஒரு ஸ்திரீக்குப் புத்தி கற்பிக்குமாறு அவளுடைய புருஷனால் வளர்க்கப்பட்ட ஹம்ஸம் இருபது கதைகளைச் சொல்லி அவளைத் தடுத்துக் கடைசி நாள் அம்மாதை யாத்திரை போய்வந்த புருஷனிடம் ஒப்புவித்ததென்பதாகக் கதை. ஸ்திரீகள் புருஷர்களை விட்டுப் பிரிந்து தனியே இருந்தால் அவர்களுடைய சித்தம் சலன மடையுமென்றும், அக்காலத்தில் யோக்யர்களின் ஸகவாஸமும் நல்லுரையும் வேண்டுமென்பது இக்கதையின் கருத்து.

142. சில மனிதர்கள் மனதில் ஒருவித அபிப்பிராயம்கொண்டு, வெளியே அதற்கு முற்றிலும் விரோதமாகக் காட்டுகின்றனர். ஸ்வய நன்மையை யபேக்ஷித்து நல்லவ[illegible]னென்றும் கெட்டவனை நல்லவனென்றும் கூறுகிறார்கள். [illegible] ஸகவாசம் என்றைக் காவது கெடுதியே செய்யும்.

143. டியூக் ஆப் வெல்லிங்டன் என்பவர் எது இன்பத்தைத் தருமென்ற கேள்விக்கு, தனக்கு வேண்டிய காரியத்தைத் தானே செய்து கொள்வது இன்பகர மென்றார். மகா வீரனென்று ஸைநிகனை எப்படித் தெரிந்துகொள்ளலா மென்றதற்கு, இன்ன ஸமயத்தில் பின்னடைய வேண்டுமென்று அறிவோனே ஸாமர்த்தியசாலி என்றார். ஜெயமடைவ தற்கு முக்கிய காரணமென்ன வென்றதற்கு, டியூக் ஸந்தர்ப்பம் நேரும் போது நல்ல புத்தியை இணைத்துக் காரியத்தைச் செய்ய வாரம்பித்தால் ஜெயமுண்டாகு மென்றார்.

144. எவன் பலவித கஷ்டங்களை அநுபவித்திருக்கிறானோ அவனே பெரியவன். அவனுடைய ஆலோசனையே சிறந்தது. கர்வமானது குற்றங் களை மறைக்கும் ஒருவிதத் திரையாகும்.

145. உன்னுடைய குற்றங்களை உனக்கு அந்தரங்கத்தில் எடுத் துரைப்பவனை நீ நண்பனாகக் கொள். உன்னைப் புகழ்பவனை நம்பாதே. அவனில் அதிகம் மயங்காதே.

146. ஜாடி கல்லில் விழுந்தாலும் ஜாடிக்கே சேதம், அதுவே உடைந்துபோம். கல்லானது ஜாடியின் மேல் விழுந்தாலும் ஜாடிக்கே சேதம். எப்படியாயினும் உடைந்துபோவது ஜாடியே. இதைப்போல் துஷ்டர்கள் நம்மை நேசித்தாலும், நாம் துஷ்டர்களை நேசித்தாலும் முடி வில் நாமே நஷ்டம் அடைவோம்.

147. எந்தத் தேசத்தில் ஸன்மானமும், ஜீவனமும், பந்துக்களும், வித்யா லாபமும் கிடைக்குமோ அந்தத் தேசமே வாஸ யோக்யமானது.

148. மூர்க்கனான சிஷ்யனுக்கு உபதேசம் செய்வதும், துஷ்டை யான ஸ்திரீயுடன் கிருஹஸ்தாசிரம தர்மத்தை நடத்துவதும், ஸதா துக் கித்திருப்பவர்களுடன் ஸகவாசம் செய்வதும் அஸந்துஷ்டியை விளைவிக்கும்.

149. எதிராடும் சேவகன், பாம்பு நடமாடும் இடம், வஞ்சனையோடு கூடிய மனைவி, துஷ்டனான நண்பன் இவர்களிடம் விழித்த கண்களுடன் இருந்து விலகுக.

150. தனத்தால் மனைவியை ரக்ஷிக்கவேண்டும். மனைவியினாலும் தனத்தாலும் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். தான் சுகமாக இருந் தால் தான் தன் குடும்ப சுகமும் நிலைக்கும்.

151. தனவான், ஸத்பிராமணன், அரசன், நதி, வைத்தியன் இந்த ஐவரும் இல்லாத இடத்தில் ஒரு நிமிஷ நேரமும் வஸிக்கலாகாது.

152. எந்த மனுஷ்யனிடத்தில் லோக வியாபாரம், பயம், வெட்கம், தாக்ஷண்யம், தியாகம் ஆகிய ஐந்து குணங்களு மில்லையோ அவனிடம் சேரலாகாது.

153. வேலைக்காரனைக் காரிய முடிவிலும், பந்துக்களை வியஸன காலத்திலும், மித்திரனை ஆபத்து வேளையிலும், மனைவியை வறுமையுற்ற போதும் பார்த்தால்—அவர்களின் யோக்கியதை நன்கு புலப்படும்.

(தொடரும்.)

நாநாவிஷயக் குறிப்புகள்

உலகத்தில் அநேக பாஷைகள் இருக்கின்றன. அதிகமாய்ப் பேசுவது சீன பாஷைதான். இதைப்பேசுவோர் 40-கோடி ஜனங்கள். இரண்டாவது ஹிந்துஸ்தானி, இதை வசனிப்போர் 10-கோடி. இங்கிலீஷ் பேசுவோர் 10-கோடி. ரஷ்யா பாஷையாடுவோர் 7-கோடி. ஜெர்மன் வழங்குவோர் 5-கோடியே 70-லக்ஷம். ஸ்பானிஷ் பேசுவோர் 4-கோடியே 70-லக்ஷம்.

***

கடமையைக் கடமைக்காகவே செய்யவேண்டுமாம். ஒருவித பிரயோஜனத்தையும் கருதி எந்தக் கருமத்தையும் செய்யலாகாதாம். இப்படிச் செய்வது துர்லபமன்றோ? ஆனதால் ஈசுவரனுக்கு அர்ப்பணமாகக் காரியங்களைச் செய்யென்று ஆசாரியர் கூறுகிறார். அதற்கு அனுகூலமாக முதலில் உனக்குவேண்டிய நண்பர்கட்கு நீ உண்மையோடு உழையென்றார். அவ்வாறு செய்வது உத்தமமாம்.

***

கல்லடைப்பு :—ஆடவர்களுக்கு சிறு நீர்விட முடியாமல், நீர்த்துவாரம் அடைப்பட்டுப்போய் சொட்டுச் சொட்டாக நீர் வெளிப்படுவதுண்டு. சில சமயங்களில் இந்த சொட்டுச் சொட்டுகளும்கூட வராமல், நீர் கட்டிக்கொண்டு, மனிதனுடைய பிராணன் அந்தரத்தை எட்டிப்பார்க்க, மூச்சு திக்குமுக்கலாட, மனித சக்திக்கும் மீறிப்போய்த் தத்தளித்துவிடுகிறான். இந்த சமயத்தில் தமிழ் வைத்தியர்கள் உள்ளுக்கு ஏதாவது மருந்துகொடுத்து நீர்த் தூவாரத்தின் இடையே தடுத்துக்கொண்டிருப்பதை வெளிப்படுத்தி நீர் இறங்குமாறு செய்வர். ஆனால் இதற்கு 24-மணி நேரமாவது ஆகும். ஆஸ்பத்திரியில் ஆங்கில டாக்டர்கள் நீர்த் துவாரத்தில் ரப்பர், ஊசியினும் நுட்பமான கருவி இவற்றை நீர்த் துவாரத்தில் செலுத்தித் தடைப்படுத்துவதை விலக்கி நீரை வெளியில் வரச்செய்து உபாதையைத் தக்ஷணமே நிவர்த்திக்கிறார்கள். ஆனால் இவ்விதம் செய்வதில் ரண சிகிச்சைக்கான வேதனையை ரோகஸ்தன் அநுபவித்து அலறித் துடி துடித்துப் போகிறான். இது நாட்பட்ட மேக வெட்டையாலும் வேறு பல காரணங்களாலும் சம்பவிக்கிறது. நீர் இறங்கிய பின்பு தக்க வைத்தியம் செய்துகொண்டு "வெட்டை"யே இல்லாமல் குணப்படுத்திக்கொள்வது முக்கியம். இதற்குத் தவறினால் மற்றொரு காலத்திற்கும் இந்த ரோகம் எட்டிப் பார்க்கக்கூடும்.

***

அஞ்ஞானம் :—மனிதர்களுக்குப் பெரிய சத்துரு அஞ்ஞானம். அஞ்ஞானத்தால் மனிதர் செய்யும் அகிர்த்தியங்களுக்குக் கணக்கில்லை. செய்யத்தகாதனைச் செய்து முடிப்பார்கள். சில ஜனங்கள் தாங்கள் ஆரம்பித்த காரியம் கைகூட வேண்டி அநேக க்ஷுத்திர தேவதைகளை ஆராதிப்பார்கள். வியாதி வந்தால் அது நிவாரணமாக வேண்டி துர்த் தேவதைகளுக்கு ஆடுமாடுகளை அர்ப்பணம் செய்வார்கள். அஞ்ஞானம் நீங்காதவர்களின் காரியங்களை இங்கே சொல்லப் புகுந்தால் வளரும். பிறகு தங்கள் எண்ணம் நிறைவேறாவிடின் தெய்வ நிந்தனை [illegible]ம்புவர். இத்தகையோரைத் திருத்த எவராலும் முடியாது